பக்கங்கள் எட்டு
விலை ரூபா 5-00
Registered as a News Paper in SriLaka.

# வலம்புரி
VALAMPURI

அசல் 22 கரட் தங்க
நகைகளுக்கு யாழ் நகரில்
சிறந்த ஸ்தாபனம்
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-2014)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 வைகாசி 15 செவ்வாய்க்கிழமை 29-05-2001 தொலைபேசி: 3378 ஒலி: 16

### அரசின் அறிக்கைக்கு புலிகள் கண்டனம்

# தடையை நீக்காவிடில் விளைவை அரசே பொறுப்பேற்க வேண்டும்!

(வவுனியா)

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கமாட்டாது என்று உத்தியோகபூர்வமாக அரசு விடுத்துள்ள அறிவிப்பை விடுதலைப் புலிகள் வன்மையாக கண்டித்து அறிக்கை ஒன்றை விடுத்துள்ளனர்.

ஸ்ரீலங்கா அரசு தனது கடும்போக்கை கடைப்பிடித்து விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதில்லை என்ற முடிவை மறுபரிசீலனை செய்யாது அதனைத் தட்டிக்கழிக்குமானால், அதனால் ஏற்படக்கூடிய பயங்கரமான விளைவுகளுக்கு அரசாங்கமே முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டும் என்று புலிகள் எச்சரித்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதில்லை என்ற அரசின் உத்தியோகபூர்வ அறிவிப்பை அடுத்து தமிழீழ விடுதலைப் புலிகளின் வன்னித் தலைமைச்செயலகம் நேற்று அறிக்கையொன்றை விடுத்துள்ளது.

அந்த அறிக்கையிலே புலிகள் தம்முடைய கண்டனத்தையும், எச்சரிக்கையையும் தெரிவித்துள்ளனர்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்குவதில்லை என்ற அரசின் நிலைப்பாடுகுறித்து விடுதலைப்புலிகளின் வன்னித் தலைமையகம் கவலையும், ஏமாற்றமும்தெரிவித்து சமாதானம் இனஒற்றுமை என்ற உயரிய இலட்சியங்களைக் கருத்தில் கொண்டு அரசாங்கம் தனது முடிவை மீள்பரிசீலனை செய்ய வேண்டும்.

இல்லாதுபோனால் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் முடிவு சமாதானப் பேச்சுவார்த்தைக்குப் பெரும் குந்தகத்தை விளைவிக்கும்.

(2-ம் பக்கம் பார்க்க)

## திருகோணமலையில் பாதுகாப்பு தீவிரம்

(திருமலை)

திருகோணமலை ஹபரணை வீதியில் தம்பலகாமம் என்னும் இடத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற கிளைமோர் கண்ணிவெடித்தாக்குதல் சம்பவத்தை அடுத்து திருமலையில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திருமலை நகரின் முக்கிய கேந்திர நிலைகளின் பாதுகாபபு அதிகரிக்கப்பட்டு தீவிர ரோந்து நடவடிக்கை கடும் தீவிரப்படுத்தப்பட்டு வீதியில் போவோர் வருவோர் பால், வயது வேறுபாடின்றி கடும் சோதனைக்குள்ளாக்கப்படுவதாக எமது செய்தியாளர் அறிவிக்கிறார்.

இதேவேளைகண்ணிவெடிச் சம்பவம் இடம்பெற்ற பகுதியில் அமைதி நிலவுவதாகவும். போக்குவரத்து வழமைக்கு திரும்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## பம்பலப்பிட்டி விடுதியில் இளம்பெண் கைது

(கொழும்பு)

பம்பலப் பிட்டியில் உள்ள விடுதியொன்றில் இளம்பெண் ஒருவர் விடுதலைப்புலி உறுப்பினர்என்ற சந்தேகத்தின் பேரில் பொலிசாரால்கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்இளம்பெண் கொடுத்த தகவலின் பேரில்மேலும் நான்கு இளைஞர்களை பொலிசார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளம் பெண் தற்கொலைத்தாக்குதலை மேற்கொள்வதற்கு கொழும்பு நகருக்குள் பிரவேசித்திருக்கலாம் என்று பொலிசார் நம்புகின்றனர்.

இதனையடுத்து கொழும்பு நகருள் பாதுகாப்புபலப்படுத்தப்பட்டுள்ளது

கைது செய்யப்பட்டவர்கள் வவுனியாவை சேர்ந்தவர்கள் என்பதுகுறிப்பிடத்தக்கது(வ)

## விடுதலைப்புலிகள் மீதான தடையை அரசு ஒரு போதும் நீக்காது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையைஅரசாங்கம் ஒருபோதும் நீக்கமாட்டாதென்று பிரதமர் இரட்ணஸ்ரீ விக்கிரம நாயக்க மீண்டும் நேற்று உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

கொறனைரட்சதாமகாவித்தியாலயத்தில் நடைபெற்ற சமுர்த்தி சங்க மகாநாட்டில் பேசுகையில்,

மேற்கண்டவாறு தெரிவித்தார்: அவர் அங்குதொடர்ந்து பேசுகையில் விடுதலைப்புலிகள் எந்தவொரு முன்நிபந்தனையுமின்றி பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கு சம்மதம் தெரிவித்துவிட்டு தற்போது தம்மீதான தடையை அரசாங்கம் நீக்கவேண்டுமென்றுகோருவது தவறானது இத் தவறைப் புரிந்த புலிகள்

(8-ம் பக்கம் பார்க்க)

## அரசியல்தீர்வு காண்பதில் அரசிற்கு அக்கறையில்லை

### ஆசிரியர் தலையங்கத்தில் ஈழநாதம்

(வவுனியா)

விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்டதடையை அரசாங்கம் நீக்குவதில்லை என்று அறிவித்திருப்பது அரசு இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வுவிடயத்தில் உளப் பூர்வமான ஈடுபாடு கொண்டிருக்கவில்லை யென்பதையேகாட்

(8ம் பக்கம் பார்க்க)

## லயன்எயர் பயணிகளுக்கு நஷ்டஈடு

(யாழ்ப்பாணம்)

1998ம் ஆண்டு பலாலியிலிருந்து இரத்மலானை நோக்கி புறப்பட்ட லயன் எயர் விமானம் வீழ்ந்தபோது. அதில் பயணம்செய்து உயிரிழந்தவர்

(8ம் பக்கம் பார்க்க]

## பிரதமநீதியரசர் மீதான நம்பிக்கையில்லாதீர்மானம் ஐ. தே. கட்சிக்குள் இழுபறி

(கொழும்பு)

பிரதம நீதியரசர் சரத் என் சில்வா மீதுஐக்கியதேசிய கட்சி கொண்டு வரவுள்ள நம்பிக்கை இல்லாத் தீர்மானத்திற்கு கட்சிக்குள்ளே எதிர்ப்பைக்கிளப்பியுள்ளதாக கட்சிவட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

பிரதம நீதியரசருக்கு எதிராகக் கொண்டு வரப் படவுள்ள இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்திற்கு கட்சி எம்பிக்களின் ஒப்பங்கள் பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போது கட்சியின் சிரேஷ்ட எம்பிக்கள் சிலர் அதில் ஒப்பமிட மறுத்துள்ளதாகவும் கட்சி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன

இதுதொடர்பாக ஐ. தேசிய கட்சியின் பேச்சாளர் கருணசேனகொடித்துவக்கு பிரதம

[8ஆம் பக்கம் பார்க்க]

## பொலிஸார் சுட்டதில் கணவர்பலி மனைவி காயம்

(ஏறாவூர்)

பொத்துவில் இன்ஸ்பெக்டர் ஏற்றம் பகுதியில் அமைந்துள்ள பொலிஸ் காவலரண்கள் மீது நேற்று அதிகாலை 3.30 மணிக்கு விடுதலைப் புலிகள் திடீர்த் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இத்தாக்குதலையடுத்து பொலிசார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் கொல்லப் பட்டார்.

அவரது மனைவி மற்றும் ஏழு மாதப் பெண்குழந்தை ஆகியோர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் எஸ். சிவலிங்கம் [41 என்பவரே கொல்லப்பட்டவராவர். எஸ். திருமளம் (31-வயது எஸ். திலக்ஷினி ஆகியோர்) காயமடைந்தவர்களாவர்.

(இ-108)

## வல்வெட்டித்துறை மீனவர்கள் யாழ்நகரில் நேற்று ஊர்வலம்

### அமைச்சர் டக்ளஸ்ஸிடம் மகஜர் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

வல்வட்டித் துறை வடக்கு, கடற் றொழிலாளர் கூட்டுறவுச்சங்க அங்கத்தவர்களும், தொழிலாளர் களும் நேற்றுக் காலை 10.00மணிக்கு அமைதிப்பேரணியொன்றை யாழ். நகரில்நடத்தியுள்ளனர்.

யாழ்மத்தியபேருந்து நிலையத்திலிருந்து நூற்றுக்கும்அதிகமான மீனவத்தொழிலாளர் ஊர்வலமாக வடக்கு அபிவிருத்தி புனர் வாழ்வு புனரமைப்பு அமைச்சின் யாழ் அலுவலகத்திற்கு சென்றனர்

அங்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடம் தமது கோரிக்கைகைகளடங்கிய மகஜர் ஒன்றைக்கையளித்துள்ளனர்.

மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது!

★கடந்த18ந் திகதிமுதல் சக்

(8ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இராசி பலன்

29-05-2001

(வைகாசி 15 செவ்வாய்)
சப்தமி மாலை 7.09 வரை
மகம் பி இ 3 29 வரை
ராகுகாலம் -2 52-4 22
நல்லநேரம்-10 22-11-52
சித்தம்

**மேடம்**

குடும்பக்கவலை, வியாதி, முயற்சிதாமதம், தாழ்வுநிலை

**இடபம்**

மனச்சஞ்சலம், விரும்பாத உறவு, தன்நம்பிக்கைகுறைவு, காரியதாமதம்.

**மிதுனம்**

அன்னியர் சந்திப்பு, முயற்சி கைகூடும், வாக்கு மேன்மை இனிய சம்பவம்-

**கடகம்**

பொருள்விரயம், கௌரவக் குறைவு, பெண்களின் உதவி, வாக்குக்கலகம்;

**சிங்கம்**

நண்பர்உதவி, பெரியோர் ஆசி போசன சுகம், முயற்சி ஜெயம்.

**கன்னி**

காரிய அலைச்சல், உணர்ச்சி வசப்படல், தனவிரயம், சயன சுகக்குறைவு.

**துலாம்**

நினைத்தகாரியம் கைகூடும் தனலாபம், கௌரவம், மன மகிழ்ச்சி.

**விருச்சிகம்**

தொழில்சிந்தை மேன்மை, காரியநன்மை, சுபநிகழ்ச்சி;

**தனுசு**

பிரயாணம்கட்டுப்பாடு அச் சமானநிலை, வயிற்றுக்கோளாறு.

**மகரம்**

வீண்பிரச்சினை, பிரயாண பயம், வியாதி, காரியதடங்கல்

**கும்பம்**

போசனசுகம், பிரயாணம், காரியக்குறைவு, சுவாரஸ்யம்.

**மீனம்**

சந்தோசமான சம்பவம், சத்துருஜெயம், புதிய முயற்சி முயற்சி நன்மை,

(பழைய நேரப்படி கணிக்கப்பட்டது.)

வளவன்

# போதனா வைத்தியசாலை பணிப்பாளரை தொடர்ந்து கடமையாற்ற பணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் தனது பதவியில் இருந்து விலகுவதற்கான முன்னறிவித்தல் கடிதம் ஒன்றினை கடந்த 21 ஆம் திகதி சுகாதார அமைச்சுக்கு அனுப்பி வைத்த போதிலும்,

சுகாதார அமைச்சின் செயலாளர் நாயகம் யாழ். போதனாவைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் செல்வி என். கனகரட்ணம் தொடர்ந்தும் கடமையாற்ற பணிப்புரை விடுத்துள்ளார்.

இதேவேளை, கடந்த 3 வருடங்களுக்கு முன் ஓய்வு பெற்ற இவர் மீள் நியமனத்தின் கீழ் கடமை யாற்றி மீள் நியமன ஒப்பந்தக் காலம் முடிவடைய இன்னமும் சில மாதங்களே இருக்கும் நிலையில்.

அண்மையில் இடம் பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பணிப்பாளருக்கு எதிராக தெரிவிக்கப்பட்ட கருத்துக்களின் எதிரொலியாக பணிப்பாளர் இராஜனாமா கடிதம் அனுப்பியமை குறிப்பிடத்தக்கது.

(உ)

## 15 பேர் சிபார்சு

[யாழ்ப்பாணம்]

யாழ். சிறைச்சாலையில் நிலவும் உத்தியோகத்தர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் சிறைச்சாலைத் திணைக்களத்தினால் 15 பேர் சிபார்சு செய்யப்பட்டுள்ளனர்.

(உ-6)

# தடையை நீக்காவிடில்--

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

## புலிகளால் உருவாக்கப்பட்ட சமாதான முயற்சி குலைக்கப்பட்டது

'நான்கு மாதங்களுக்கு மேலாக ஒருதலைப் பட்சமாக அமைதியைப்பேணி சமாதானத்தில் எமக்குள்ள நேர்மையான ஆவலை நாம் உலகத்திற்கு நிரூபித்துக் காட்டியிருக்கிறோம். ஆனால் சிறிலங்கா அரசாங்கமோ எமது நல்லெண்ண முயற்சிக்கு ஆக்கபூர்வமான முறையில் பதில் நடவடிக்கை எடுக்க மறுத்து வந்துள்ளது. அத்தோடு எமது போர் நிறுத்தம் முடிந்து ஒரு சில மணி நேரத்தில் யாழ் குடாவின் தென்பகுதியில் எமது முன்னணி நிலைகளை ஊடறுத்துப் பாரிய படையெடுப்பு ஒன்றை மேற்கொண்டது. இதன் கொடூர விளைவாக சிங்களப் படையினர் மத்தியிலேயே பெரும் இரத்தக்களரி ஏற்பட்டதுடன் விடுதலைப் புலிகளால் உருவாக்கம் செய்யப்பட்ட நல்லெண்ண புறநிலையும் சீர்குலைக்கப்பட்டது. இது மட்டுமன்றி, அண்மையில் வன்னியில் சமாதானப் பணியில் ஈடுபட்டிருந்த எமது அரசியற் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனை கொன்றழிக்கும் முயற்சி ஒன்றையும் சிங்கவ இராணுவத்தினர் மேற்கொண்டனர். இறுதியாக இப்பொழுது சமாதான நல்லெண்ணப் புறநிலையை உருவாக்கும் நோக்கத்துடன் நாம் தெரிவித்த யோசனைகளையும் ஏற்றுக்கொள்ள முடியாத முன் நிபந்தனைகளாக அரசாங்கம் நிராகரித்திருக்கிறது. இவற்றை எல்லாம் பார்க்கும் பொழுது சந்திரிகாவின் அரசுதான் சமாதானத்திற்கான அரிய சந்தர்ப்பங்களை வீணடித்ததுடன், பேச்சுவார்த்தை ஆரம்பமாவதற்கும் முட்டுக்கட்டை போடுகிறது என்பதைக் கண்டுகொள்ளலாம்'

எமது தலைவர் பிரபாகரன் அவர்கள் சென்ற ஆண்டு மாவீரர் தின உரையில் கூறியது போன்று சமாதானப் பேச்சிற்கு முன்நிபந்தனைகளை விதிக்கவில்லை. அத்துடன் நாம் நிறைவேற்ற முடியாத கோரிக்கைகள் எதனையும் முன்வைக்கவில்லை. சமாதானப் பேச்சுகளுக்கு உகந்ததான ஒரு ஆரோக்கியமான நிலையான சூழலை உருவாக்கும் நோக்கத்துடன். ஏற்றுக்கொள்ளக் கூடிய நடைமுறைச் சாத்தியமான நல்லெண்ண முயற்சிகளான சில யோசனைகளையே தெரிவித்தோம். சமாதானப் பேச்சுகளுக்கு முன்னராக போருக்கு ஓய்வு கொடுக்க வேண்டுமென்ற எமது கோரிக்கை நியாயமானது, பொருத்தமானது. ஏனென்றால் இரத்தம் சிந்தும் போரை நிகழ்த்திக் கொண்டு ஒருவரை ஒருவர் கொன்றொழித்தவாறு பேச்சுக்களை நடத்துவது சுத்த முட்டாள்தனம். நாளாந்த வாழ்விற்கு ஆதாரமான உணவு, மருந்து வகைகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் மீதான தடையை நீக்குமாறு நாம் கோருவது ஒரு மனிதாபிமான வேண்டுகோள் ஆகும்.

### தமிழீழ மக்களின் ஏகபிரதிநிதிகள் நாங்களே!

பொருளாதார ரீதியான இன அழிப்பை எதிர்கொண்டு நிற்கும் எமது மக்களின் தாங்கொணாத் துயரைத்துடைக்கும் நோக்குடனேயே நாம் இந்தக் கோரிக்கையை முன்வைத்தோம். எமது மக்களின் சட்டரீதியான பிரதி நிதிகளாகவும், பேச்சுக்களில் சமத்துவமான பங்குதாரர்களாகவும் அரசியற் பேச்சுவார்த்தைகளில் நாம் ஈடுபடும் நோக்கத்துடனேயே எமது இயக்கம் மீதான தடையை நீக்கிவிடுமாறு நாம் கோரிக்கை விடுத்தோம். நோர்வேயின் சமாதானத் தூதுவர் சொல்ஹெய்ம் லண்டனில் எமது அரசியல் ஆலோசகர் பாலசிங்கம் அவர்களைச் சந்தித்த வேளைகளில் தடை நீக்கம் பற்றிய பிரச்சினை எழுப்பப் பட்டது. அத்துடன் பகிரங்க மேடைகளிலும் பத்திரிகைக்கு அளித்த செவ்விகளிலும் பேச்சுக்கு முன்னராக புலிகள் மீதான தடையை நீக்குவதன் அவசியத்தையும் முக்கியத்துவத்தையும் பாலசிங்கம் வலியுறுத்தி வந்துள்ளார்.

பயங்கரவாத முத்திரை குத்தப்பட்ட, சட்டவிரோதமான, குற்றப் பழியுடைய ஒரு அமைப்பாக நாம் பேச்சுக்களில் ஒரு பொழுதும் பங்குகொள்ளப் போவதில்லை. நாம் தமிழீழ மக்களின் ஏகப் பிரதிநிதிகள். கடந்த காலங்களில் திம்புவிலும், கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் சிறிலங்கா அரசுடன் நாம் நடத்திய பேச்சுக்களின் போது பயங்கரவாத முத்திரை எம்மீது குத்தப்பட்டிருக்கவில்லை. ஆகவே தான் பேச்சுக்களின் முன்னராக எமது மக்களைப் பிரதிநிதிப்படுத்தும் அரசியல் சட்டபூர்வ நிறுவனம் என்ற சட்டரீதியான அந்தஸ்து எமக்கு வழங்கப்படுவது அவசியம்.

எமது கோரிக்கை நியாயமானது, பொருத்தமானது. ஒத்திசைவற்ற சமத்துவமற்ற முரண்பாடான இரு தரப்பினர் மத்தியில் நிகழும் பேச்சும் அப் பேச்சுக்களால் ஏற்படும் தீர்வுகளும் செல்லுபடியற்றவை, நம்பகத்தன்மை அற்றவை, ஆகவே, பேச்சுக்கள் ஆரம்பமாவதைத் தடுக்கும் நோக்குடன் நாம் நிறைவேற்ற முடியாத நிபந்தனைகளை முன்வைக்கிறோம் எனக் கூறுவது தவறாகும்; மாறாகப் பேச்சுவார்த்தையை முன்னெடுக்க ஏதுவான புறநிலையை உருவாக்கித் தரும் நோக்குடனேயே நாம் இந்த யோசனைகளைத் தெரிவித்தோம். ஆனால் உண்மையாக, நேர்மை சமாதான இலட்சியத்தில் அரசாங்கத்திற்கு அக்கறை இருக்குமானால் நாம் கேட்டுக்கொண்டதற்கிணங்க போர் நெருக்கடியைத் தணித்து, பொருளாதார நெருக்குவாரங்களைத் அகற்றி, புலிகள் மீதான தடையை நீக்க அரசாங் தயங்காது' என்று விடுதலைப் புலிகளின் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

### அரசபயங்கரவாதத்தினால் 70ஆயிரம்அப்பாவி தமிழர் அழிக்கப்பட்டனர்

ஒப்பிடமுடியாத கொடுஞ்செயல்களை இழைத்ததன் காரணமாகவே விடுதலைப்புலிகள் இயக்கம்மீது பயங்கரவாத முத்திரை குத்தப்பட்டுள்ளதாக அரசாங்கத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது இந்தக் குற்றச்சாட்டின் அடிப்படையில் இக்குற்றப்பத்திரிகையைத் தயாரித்தவரும் புலிகளை பயங்கரவாதப் பூதமாக உலகத்திற்குப் பூச்சாண்டி காட்டி வருபவருமான கதிர்காமரிடமும் சந்திரிகாவின்அரசிடமும் ஒருகாத்திரமான கேள்வியை நாம்எழுப்ப விரும்புகிறோம். இனஅழிவுப்பரிமாணத்தில் தமிழ்மக்களுக்கு எதிராக ஒப்பிடமுடியாத கொடுமைகளையும் மன்னித்துவிட முடியாத போர்க்குற்றங்களையும் இழைத்துள்ள சிங்கள அரசை நாம் எப்படிக்குறியிடுவது எத்தகைய முத்திரையைக் குத்துவது சிங்களஅரசு என்னும்பொழுது ஆட்சிபீடம்ஏறிய

(8-ம் பக்கம் பார்க்க)


# கலால்யா பயிற்சி

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(பெருமாள் கோயிலுக்கு அண்மையில்)

## மகளிருக்கான மனைப் பொருளியலும் கைத்திறனும் பயிற்சிகள்

★ கேக் ஐசிங்
(பட்டர் ஐசிங், றோயல் ஐசிங், பாச்மென்ட் ஐசிங், புறொஸ்றிங் ஐசிங், Fondont Icing மற்றும் மாச்சீனி அலங்காரம்)

★ உணவு தயாரித்தல்
(கீழைத்தேச, மேலைத்தேச உணவுகள், சிற்றுண்டிகள், புடிங் வகைகள், குளிர்பானங்கள், ஐஸ்கிறீம் வகைகள், சூப் வகைகள், தயாரித்தல் இத்துடன் உணவை அலங்கரிக்கும் முறை, மரக்கறிகளைக் குடைந்து உருவங்கள் செய்தல், மேசை அலங்காரம், உணவு பரிமாறும் வீதம்)

★ உடை தயாரித்தல்
(குழந்தைகள், சிறுவர், மகளிருக்கான உடைகள், கதிரை விரிப்பு, தலையணை உறை தைத்தல், பூப்போடுதல்)

★ பூவேலை
(ஸ்ரொகிங்நெற், டிப் இன் மலர்கள், Panclay மலர்கள், பேப்பர் றிபன் மலர்கள், துணியினால் மலர்கள், மலர்ச் சென்டுகள் Bouquet செய்தல்)

★ கைவேலை
(பேப்பர் அலங்காரம், Soft Toys, வைக்கோல் வேலை, கழிவுத் துணி வேலை, கம்பளி நூல் வேலை, றிபன் வேலை)

★ பப்றிக் வர்ணம் தீட்டுதல் (*FABRIC PAINTING*)
கதிரை விரிப்பு, தலையணை உறை, உடைகள், சாடிகளில் வர்ணம் தீட்டுதல்;

ஆகிய பயிற்சிகள் பயிற்றுவிக்கப்படும். மேற்படி பயிற்சிகள் பயில்வோருக்கு இலவசமாக கூந்தல் அலங்காரம், மணப்பெண் அலங்காரம், முகஒப்பனை கோலம் வகுப்புகள் நடைபெறும்.

- பயிற்சிக் காலம் 6 மாதம்
- பயிற்சியின் முடிவில் டிப்ளோமா தகைமைச் சான்றிதழ் வழங்கப்படும்
- இப் பயிற்சிகளுக்கு வயதெல்லை கிடையாது
- கிழமை நாள் பயிற்சிகள் திங்கள், செவ்வாய், புதன் ஆகிய நாட்களில் காலை 9 மணி முதல் பி.ப 1.00 மணிவரை நடைபெறும்

சனி, ஞாயிறு பயிற்சிகள் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணிவரை நடைபெறும.

சனி, ஞாயிறு வகுப்புக்கள் ஆரம்பம்: 03-06-2001 (ஞாயிறு)

★ கிழமை நாள் புதிய வகுப்புக்கள் ஆரம்பம் 04-06-2001 (திங்கட்கிழமை)

மேலும் விவரங்களுக்கு காலை 9.00 மணிமுதல் பி.ப 2.00 மணிவரை நேரில் தொடர்பு கொள்ளவும்.

இயக்குநர்.

(கி.2039)

# கண்ணீர் விட்டழும் பொழுதினில்
# கவலையும் போய், நோயும் நீங்கும்

கே. நாகமணி மகேந்திரலிங்கம்

சாதாரணமாக எப்போதும் கண்ணீர்ச்சுரப்பியில்கண்ணீர் இருந்துகொண்டேஇருக்கும். இப்படிக் கண்ணில்உள்ளகார்னியாவை கண்ணீர் ஈரப் படுத்திக் கொண்டு இராவிட்டால் கார்னியாவின் மீதுள்ள செல்கள் வறண்டு தோல் போல் ஆகி கண்மங்கல் ஏற்பட்டு விடலாம்.

### சத்துப் பொருட்கள்

கண்ணை இப்படி ஈரப் படுத்த கண்ணீர் சுரப்பி ஒரு நாளைக்கு வெளியேற்றும் கண்ணீர்மிகச்சொற்பஅளவே அதாவது ஒருநாளைக்குஇந்த வகையில் சுமார் இரண்டு மில்லிலீட்டர் மட்டுமே வெளியேறுகிறது. மற்றப்படி வலிகளின் போதும், கண்ணுக்கு வேறு தூசி, தும்பு, புகை இவற்றால் உறுத்தல்கள் ஏற்படும் போதும் துன்பம்துயரத்திற்கு நாம் ஆளாகும்போதும் கண்ணீர்ச் சுரப்பி அதிக அளவில் ஊற்றெடுத்து கண்ணீரை உகுக்கிறது. கண்ணீரிலும்சில சத்துப் பொருட்கள் இருக்கின்றன. இந்த திரவத்தில் சிறிதளவு புரோட்டீன் உள்ளது.

ஓரளவு உப்பும் மிகக் குறைவாக குளுக்கோஸ் சத்தும் இருக்கிறது. கண்ணீருக்குச் சில நோய்களைக்குணப்படுத்தும் மருத்துவ சக்தியும் இருக்கிறது. நியூரோடிக் ஆஸ்துமா நோயையும் சில வகைத்தலைவலிகளையும் மற்றும் மெதுவான நோய்களையும் குணப் படுத்தி விடுகிறது.

### கண்ணீர் கைமருந்து

பெண்களைப் பொறுத்த வரையில் கண்ணீர் அவர்களுக்கு கைவந்த கலை. எதைச் சாதிப்பதற்கும் அது அவர்களுக்கு ஒரு கைமருந்து போல பெண்கள் ஆண்களை விட பெரும்பாலும் அதிக ஆயுளுடன் இருப்பதற்கு அவர்கள் இப்படி அழுது மனச்சுமையைக் குறைத்துக்கொள்வதும் காரணமாக அமைவதாகஆய்வுகள் பல கூறுகின்றன.

### அழுதால் ஆயுள் கூடும்

ஆண்களைப் பொறுத்த வரையில் ஒரு சிலர்கவலைகள் மத்தியில் கண்ணீரைச்சொரிவார்கள். சிலர்மனதுக்குள்ளே கவலைகளையோ, துக்கங்களையோ அடக்கிக்கொள்வார்கள். அவர்களை 'கல் நெஞ்சன்' என்றும் சொல்வாரும் உளர்.

ஆகவே, நம் வாழ்க்கையில் அழுகைக்குமுதலிடம்கொடுங்கள். நல்லசோகப்படங்களைப் பார்த்தாவது அழுகையைவரவழையுங்கள். அதிகம் அழுதால் வாழ்நாள் கூடஅதிகரிக்கும். அழுகையின் ஆழம் தற்போது உணரப்பட்டுள்ளது. கண்ணீரின் மகத்துவம் ஒரு நோய் தீர்க்கும் நிவாரணி என்ற உண்மையை உணர்வோமாக.

# சங்கே முழங்கு

## நிர்வாகசேவை பரீட்சை
## வயதெல்லையில் அதிகரிப்பு ஏற்படுமா?

கடந்த 06-06-1999 ல் நடைபெற்ற இலங்கை நிர்வாக சேவை திறந்த போட்டிப் பரீட்சையில் 151 சிங்களவர்கள் மாத்திரமே தெரிவு செய்யப்பட்டனர் ஒரு தமிழர் கூட தெரிவு செய்யப்படவில்லை. பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 15/90 ம் இலக்கச்சுற்றறிக்கையின் பிரகாரம்இனவிகிதாசார அடிப்படையில் தெரிவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தால் 25 க்கும் மேற்பட்ட தமிழர்கள் தெரிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்

இப்பரீட்சையில் தோற்றி கூடிய புள்ளிகளை தமிழ் பரீட்சார்த்திகள் பெற்றிருந்தபோதும் தமிழர்கள் என்பதால் எதுவித பலனும் கிடைக்கவில்லை.

எனினும்தற்போது வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கு மாத்திரம் நிர்வாக சேவை பரீட்சைக்கான வர்த்தமானி அறிவித்தலில் திறந்த போட்டிப் பரீட்சைக்கான வயதெல்லை 22 தொடக்கம் 30 ஆக குறிப்பிடப்பட்டுள்ளது

இவ்வாறு வயதெல்லை காணப்படுவதால் 1999 ல் பரீட்சைக்குத்தோற்றி பாதிக்கப்பட்டமாணவர்கள் புதிய பரீட்சையில் தோற்ற முடியாதுள்ளது.

ஆகவே வயதெல்லையை 22 தொடக்கம் 35 ஆக மாற்றி பாதிக்கப்பட்ட பரீட்சார்த்திகள் பரீட்சை எழுதுவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்துவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் உதவுவார்களா?

பாதிக்கப்பட்ட மாணவர்கள்

## மீண்டும் யுத்தம் வெடித்தால்
# நாடு தழுவிய மக்கள் எதிர்ப்பை அரசு எதிர்கொள்ள வேண்டிவரும்

யாழ்.பல்கலை மாணவர் ஒன்றியத் தலைவர் எச்சரிக்கை

[யாழ்ப்பாணம்]

நாம் யுத்தத்தினை ஒரு போதும் விரும்பவில்லை. எமது அபிலாசைகளை அடையத்தக்க வகையில் பேச்சுக்கள் இடம்பெற வேண்டும். எனவே அரசு இனியும் காலம் தாழ்த்தாது புலிகள் மீதான தடையை நீக்குவதோடு பேச்சுக்கான உகந்த சூழ்நிலையை உருவாக்கி பேச்சுக்களை மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் ஆரம்பிக்க வேண்டும்.

நேற்றைய தினம் யாழ். பல்கலைக்கழகத்தில் இடம் பெற்ற பொங்குதமிழ் பிரகடனப் பெயர்ப்பலகையை திரை நீக்கும் நிகழ்வில் உரையாற்றிய போது, யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ். கஜேந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரைநிகழ்த்துகையில்,

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் பேச்சுக்களைஆரம்பிக்கத் தவறிமீண்டும் யுத்தம் வெடிக்கும் அபாயத்தினை அரசு ஒருபோதும் ஏற்படுத்தக்கூடாது.

அவ்வாறு ஏற்படுத்தினால் நாடு தழுவிய எதிர்ப்புப் போராட்டங்களை அரசு மக்களிடம் இருந்து எதிர்கொள்ளும் என்று குறிப்பிட்டார்.

மேலும் பேசுகையில்,

கடந்த 50 வருடங்களுக்கு மேலாக இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு எதிரான ஸ்ரீலங்கா அரசின் இன அடக்கு முறைப்போர் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

இப்போர் இன்று பூதாகரமாக உருவெடுத்து நிற்கிறது. அந்த யுத்தத்தை இனியும் தொடர விடாது முடிவுக்கு கொண்டு வரவேண்டும்.

சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கும் போது தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் எவ்வித ஏற்றத்தாழ்வுகளும் இன்றி சமனான அந்தஸ்ததில் இருந்து பேச வேண்டும் என்று குறிப்பிட்டார்.

[உ]

## யாழ். பல்கலையில்,
# பொங்கு தமிழ் பிரகடனம் பெயர்ப்பலகைதிரை நீக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்- பல்கலைக் கழக மாணவர் ஒன்றிய ஏற்பாட்டில், நேற்றைய தினம் பல்கலைக்கழக பரமேஸ்வரர் ஆலயத்திற்குமுன்பாக "பொங்கு தமிழ் பெயர்ப்பலகை" திரை நீக்க நிகழ்வு இடம்பெற்றது.

மு.ப 10. 30 மணியளவில் விஞ்ஞான பீட மாணவ ஒன்றியத் தலைவர்பொன். திவாகர் தலைமையில்இடம்பெற்ற இந்நிகழ்வில் மங்கள இசை முழங்க மும்மொழியிலும் "பொங்கு தமிழ் பிரகடனம் 17. 01. 2001" என்று பொறிக்கப்பட்ட பெயர்ப் பலகையை பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ். கஜேந்திரன் திரை நீக்கம் செய்து வைத்தார்.

முன்னதாக மு.ப 10.00 மணியளவில் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்ற யா/ பல்கலைக் கழக மாணவர் ஒன்றியப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்ட மாணவர்கள் அனைவரும் மேற்படி நிகழ்வில் திரண்டமை குறிப்பிடத்தக்கது.

பெயர்ப் பலகை திரை நீக்கம் செய்யப்பட்ட இடத்தில் எழுச்சியை ஏற்படுத்தும் விதத்தில் மஞ்சள், சிவப்பு வர்ணக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன.

இந் நிகழ்வில், யா/ பல்கலைக் கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் யா/ பல்கலைக் ஊழியர் சங்கத்தினர் கலந்து கொண்டனர்.

இறுதியாக, மாணவர்களின் ஒன்றிணைந்த எழுச்சிப்பாடலும் இடம் பெற்றது.

(உ-6-59)

## இன்று கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் கே. பரமேஸ்வரன் தலைமையில் இன்று காலை 9மணிக்கு வலயக் கல்விப்பணிப்பாளர்கள் கூட்டம் யா- வலயத்தில் இடம் பெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கு வலயக் கல்விப்பணிப்பாளர்கள், சகல வலயங்களினதும் பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள், கல்வி நிர்வாகம், கல்வி அபிவிருத்தி திட்டமிடல் பிரிவுப் பொறுப்பாளர்கள், கணக்காளர்கள், சிரேஷ்ட தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் நிர்வாக உத்தியோகத்தர்கள் ஆகியோரையும் சமுகமளிக்குமாறு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் என். தணிகாசலம்பிள்ளை அறிவித்துள்ளார். (உ)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் வெளியான வெட்டுப்புள்ளியால் பல்கலைக்கழக அனுமதியில் பாதிப்பை எதிர்கொள்பவர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் நாளை புதன்கிழமை மு.ப. 9.30 மணிக்கு கன்னாதிட்டியில் உள்ள 'நியூசயன்ஸ் ஹோல்' கல்வி நிலையத்தில் இடம்பெறவுள்ளது. (உ-6)

## புதிய நியமனம்

(துன்னாலை)

கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றியஎஸ்.சிவானந்தம் இம்மாதம் தொடக்கம் வடபிராந்திய உதவி மதுவரி ஆணையாளராக நியமனம் பெற்றுள்ளார். (உ-41)

கசிப்பு உற்பத்தியாளர்களிடம் இருந்து
# 33 ஆயிரத்து 750 ரூபா தண்டப்பணமாக அறவீடு

(துன்னாலை)

வடமராட்சிப் பகுதியில் சட்டவிரோதகசிப்பு உற்பத்தி தொடர்பாக கையும மெய்யுமாகப் பிடிக்கப்பட்டவர்கள் கடந்தவாரம பருத்தித்துறை நீதிமன்றில ஆஜர் செய்யப்பட்ட போது.

33 ஆயிரதது 750 ரூபாகுற்றப்பணமாக அறவிடப்பட்டதாக பருத்தித்துறை மதுவரித்திணைக்களப் பொறுப்பதிகாரி றொகன் சஞ்சேம் தெரிவித்தார்.

கரவெட்டி கிழக்கு. துன்னாலை, அல்வாய், அம்பன், குடத்தனை, உடுப்பிட்டி, பருத்தித்துறை ஆகிய பகுதிகளில சட்டவிரோத கசிப்பு உற்பத்தி செய்தவர்களே இவ்வளவு தொகையை குற்றப் பணமாகச் செலுத்தியுள்ளனர். (உ-41)

## தொடர்பு கொள்க

(யாழ்ப்பாணம்)

கீழே பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள்சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

★ ரி. ரகுகுமார், மே/பா எஸ். ஜெகதீஸ்வரன். கோண்டாவில் மேற்கு.
★ அன்னசாமி சிவசுப்பிரமணியம். புத்தூர் மேற்கு.
★ கே. ஜனாகி. இந்துக் கல்லூரி அருகில், உரும்பிராய் கிழக்கு. (உ)

## சமய அறிவு போட்டி

(திருநெல்வேலி)

திருநெலவேலி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு, பாடசாலை மாணவர்களிடையே சமய அறிவு போட்டி ஒன்றை காளிகோவிலடி சனசமூக நிலையம் நடத்தவுள்ளது. (உ)

## அதிகரித்த சம்பளம் வழங்கப்பட்டது

(யாழ்ப்பாணம)

சுன்னாகம பலநோக்கு கூட்டுறவுச் சங்க உத்தியோகத்தர்களுக்கு கூட்டுறவு உதவி ஆணையாளரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள சுற்று நிருபத்திற்கு அமைவாகஇந்த மாதத்திற்கான அதிகரித்த புதிய சம்பளம் வழங்கப்பட்டுள்ளதாக அதன்செயலாளர் தெரிவித்துள்ளார். (உ-2)

## ரணில் இந்தியா பயணம்

(கொழும்பு)

ஐக்கியதேசியக் கட்சித் தலைவரும எதிர்க்கட்சித் தலைவருமான ரணில்விக்கிரசிங்கா இந்தியப் பிரதமர் வாஜ்பாயைசந்திக்க இந்தியா செல்லவுள்ளார்.

இந்தியா செல்லும ரணில் விக்கிரமசிங்கா பிரதமரையும் இந்தியஉயர் அதிகாரிகளையும சந்தித்துப்பேசவுள்ளார்.

இந்தியா சென்றுவிட்டு கொழும்புதிரும்பும் வழியில் தமிழகமுதல்வர் செல்வி ஜெயலலிதாவையும் சந்திப்பார்என்றும ஐக்கியதேசியக் கட்சி வட்டாரங்கள தெரிவித்துள்ளன. (ம)

## நிலத்தில் விழுந்தவர் அறிவிழந்தார்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் அந்தோனியார் ஆலயபாலர்பாடசாலைவிளையாட்டு நிகழ்வில் பெற்றோருக்கான போட்டியில்பங்குபற்றியவேளை தவறுதலாக நிலத்தில தலையடிபட விழுந்தவர் அறிவிழந்த நிலையிலயாழ் போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் தவசிகுளம கொடிகாமத்தை பிறப்பிடமாகவும சுன்னாகத்தை வசிப்பிடமாகக் கொண்ட நீக்கலஸ் ஞானரட்ணம் என்பவரே அவசரசிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டவராவார். (5)

# செய்தித் துளிகள்

## நேரசூசி வந்தடைந்தது

(கந்தர்மடம்)

எச். என். டி. எ. புதிய பாடத்திட்ட முதலாம் வருட மாணவர்களுக்கான ஆண்டிறுதிப் பரீட்சைக்கான நேரசூசி யாழ் உயர் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு வந்து சேர்ந்துள்ளது.

இதன் பிரகாரம், வழமையாக டிசெம்பர் மாதத்தில் இடம்பெற்று வந்த மேற்படி பரீட்சை, இவ்வருடம் ஒக்டோபர் மாதத்தில் இடம்பெறவுள்ளது. (உ-37)

## இலவசக் கொப்பிகள் வழங்கல்

(செயபியன்பற்று)

மணற்காடு றோ.க.த.கலவன் பாடசாலை மாணவர்களிற்கு இலவசமாக அப்பியாசக் கொப்பிகள் கடந்த வியாழக்கிழமை வழங்கப்பட்டது.

மணற்காட்டு புனித அந்தோனியார் ஆலய பங்குத்தந்தை மற்றும் பங்கு மக்கள் இவ் இலவசக் கொப்பிகளை வழங்கினர். (க-42)

## பூராண் கடிக்கு இலக்கானோர் வைத்தியசாலையில்

(மந்திகை)

வடமராட்சி பிரதேசத்தில் பூராண் கடிக்குள்ளான இருவர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

புற்றளை பருத்தித்துறையைச் சேர்ந்த ஆ.சரோஜினி (வயது 31), கரணவாய் மத்தியைச் சேர்ந்த எஸ். கோகில ராணி (வயது 14) ஆகிய இருவருமே வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (க-23)

## விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

அம்மன் முன்பள்ளியில் வருடாந்த விளையாட்டு விழா நாளை புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு காரைநகர் சுப்பிரமணியவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் முன்பள்ளி இயக்குநர் நா. குகதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக ஊர்காவற்றுறை பிரதேச சபைத்தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ந. மதனராசா கலந்து கொள்கிறார். [ம]

## தொடரும் புனருத்தாரண வேலைகள்

[புலோலி]

பொலிகண்டி இடுப்பமூலை அருள்மிகு சித்திவிநாயகராலய புனருத்தாரண வேலைகள் சுமார் 20 இலட்சம் ரூபா செலவில் நடைபெற்று வருகின்றன.

இவ் ஆலய பாலஸ்தாபனம் கடந்த மாசி மாதம் 7 ம் திகதி நடைபெற்றது. (செ-52)

## பரீட்சை பிற்போடப்பட்டது

(கந்தர்மடம்)

யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் இடம்பெறவிருந்த எச்.என் டி எ என். டி இ என்.டி.பி.எஸ் முதலாம் வருட மீள் பரீட்சைகள் பிற்போடப்பட்டுள்ளதாய் நிறுவன இயக்குநர் ரி. இராஜரட்ணம் அறிவித்துள்ளார். (உ-37)

## வி. உபகரணம் வழங்கல்

(புலோலி)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் விளையாட்டு உபகரணங்கள் வழங்கலும் பொது நிகழ்வுகளும் கடந்த சனிக்கிழமை டருத்தித்துறை தும்பளையில் இயங்கும் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் உதவி அரசாங்க அதிபர் வி. பி. வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவிலே பருத்தித்துறை பிரதேசசபைத் தலைவர் ஐ. ஸ்ரீரங்கேஸ்வரன் சிறப்பு விருந்தினராகவும், யாழ். மனித முன்னேற்ற நடு நிலைய இயக்குநர் அருட்திரு. எஸ். ஜெயக்குமார் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டனர். (உ-52)

## சுவரொட்டிப் போட்டி

(கல்வயல்)

ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியத்தின் அனுசரணையுடன் சுகாதார அமைச்சின் சனத்தொகைப்பிரிவு நாடளாவிய ரீதியில் சுவரொட்டிச் சித்திரப் போட்டியைத்தொடர்ச்சியாக பத்தாவது வருடமாக இவ்வாண்டும் நடாத்த முன்வந்துள்ளது.

இப்போட்டிகள் 6 வயதுக்கும் 8 வயதுக்கும் இடைப்பட்டோர், 9 வயதுக்கும் 12 வயதுக்கும் இடைப்பட்டோர், 13 வயதுக்கும் 15 வயதுக்கும் இடைப்பட்டோர், 16 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்டோர். 19 வயதுக்கு மேற்பட்டோர் என 5 பிரிவாக இடம்பெறவுள்ளன. (உ-111)

## விண்ணப்பம் கோரல்

(கல்வயல்)

மொறட்டுவப் பல்கலைக்கழக தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறி 2001 / 2002 விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க. பொ. த. உயர்தர வகுப்பில் கணிதப் பிரிவில் மூன்று பாடங்களில் சித்தியடைந்த 24 வயதுக்குட்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்ப முடிவு அடுத்த மாதம் 29 ஆம் திகதியாகும். (உ-111)

## மின்சாரம் வழங்கப்படுமா?

(யாழ்ப்பாணம்)

மக்கள் மீளக்குடியமர்ந்து பல வருடங்களாகியும் இதுவரை சில்லாலை அம்மன் வீதிப் பகுதிக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை.

மின் தூண்கள் நடப்பட்டு பல மாதங்களாகியும் இதுவரை மின் இணைப்பு வழங்கப்படாதது குறித்து அப்பகுதி மக்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர். (உ-104)

## விண்ணப்பம் கோரல்

(கல்வயல்)

இலங்கை தேசிய கல்வி நிறுவகத்தால் கல்வி முகாமைத்துவ பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. [உ-11]

## 19 பேர் பலி

(யாழ்ப்பாணம்)

கடந்த நான்கு மாதகாலப் பகுதியில் மிதிவெடி மற்றும் கண்ணி வெடியில் சிக்கி 19 பொதுமக்கள் உயிரிழந்ததுடன் 58 பேர் காயமடைந்துள்ளதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. [உ-5]

# நோர்வேயின் சமாதான முயற்சிகளில் வெற்றி விடுதலைப்புலிகளின் நம்பிக்கைதரும் செயற்பாடுகளிலே தங்கியுள்ளது

## அமைச்சர் டக்ளஸ் எடுத்துரைப்பு

(யாழ்ப்பாணம்)

சமாதானப் பேச்சுவார்த்தை நடைபெறுமாயின் எமது கட்சி அதனை நிச்சயம் வரவேற்கும். அதேவேளை தமிழ் பேசும் மக்களின் ஆதரவிலான கட்சி என்னும் வகையிலும், மக்கள்எமக்குஅளித்த ஆணையின் அடிப்படையிலும் அம்மக்களின் பிரதிநிதிகளாக கலந்துகொண்டு பிரச்சினைக்கு தீர்க்கமான ஒரு தீர்வினைக்காண எமது பங்களிப்பினையும் வழங்குவோம் என வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கொழும்பிலிருந்து வெளிவரும் மாதாந்த சஞ்சிகை ஒன்றுக்கு அளித்த செவ்வி ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

பேச்சு வார்த்தை முயற்சிகளுக்கு ஒருபோதும் தனது ஈ.பி.டி.பி கட்சி தடையாக இருக்க மாட்டாது எனவும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ், நோர்வே நாட்டின் முயற்சி பற்றி கேட்ட கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கையில் நோர்வேயின் முயற்சிகளை வரவேற்கின்றோம். அவர்களது நல்லெண்ணத்தைப் பாராட்டுகின்றோம்.

எனினும் ஏற்பாட்டாளர்கள் எனும் வகையில் அவர்களின் பங்களிப்பு ஒருவரையறைக்கு உட்பட்டது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்

எனவே இம் முயற்சிவெற்றி பெறுவதென்பது நோர்வேயின் கைகளில் இல்லை. அது விடுதலைப் புலிகளின் நம்பிக்கை தரும் செயற்பாடுகளிலேயே உள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள், தற்போது அரசு மீது விதித்துள்ள, புலிகள் மீதானதடை நீக்க நிபந்தனை பற்றி அதே செவ்வியில், அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா கருத்துத் தெரிவிக்கையில், பேச்சுவார்த்தைக்கு தடைநீக்கத்தை ஒரு தடையாக புலிகள் இறுதி நேரத்தில் கூறுவது ஏற்றுக் கொள்ள முடியாததொன்று.

அயர்லாந்திலும் பலஸ்தீனத்திலும் இத்தகைய தடைச்சட்டம் அமுலில் இருந்த போதுதான் பேச்சுவார்த்தை நடைபெற்று தீர்வும் காணப்பட்டது என தெரிவித்தார். (உ-10)

## மாதர் முன்னேற்ற அபிவிருத்திச் சங்கத்திற்கு 25 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்க உறுதி

(யாழ்ப்பாணம)

யாழ்ப்பாணம் நீராவியடி மாதர் முன்னேற்ற அபிவிருத்திச் சங்கத்தின் சமூக முன்னேற்ற நடவடிக்கைகளுக்காக 25 ஆயிரம் ரூபா நிதியினை ஒதுக்கித் தருவதாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி உறுதியளித்துள்ளது.

மேற்படி சங்கத்தின்மாதாந்தக் கலந்துரையாடல் நேற்று முன்தினம் சங்கக் கட்டடத்தில் இடம்பெற்ற போது, அதில் கலந்துகொண்ட ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் மேற்கண்ட உறுதிப்பாட்டினை வழங்கினர்.

அத்துடன், வேலைவாய்ப்புகள் வழங்குமிடத்து நீராவியடியைச் சேர்ந்த வேலையற்ற பெண்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும் எனவும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிப் பிரதிநிதிகளால் உறுதியளிக்கப்பட்டதாய் தெரியவந்துள்ளது. (உ-10)

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

மே மாதம் 27 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச ரீதியாகத் தரப்படுகின்றன.

| | |
|---|---|
| 194329 ஏ | 194397 ஏ |
| 194481 ஏ | 194481 பி |
| 194481 சி | 194481 டி |
| 194844 ஏ | 194844 பி |
| 195057 ஏ | 195804 ஏ |
| 195891 ஏ | 196060 ஏ |
| 199447 ஏ | |

### சங்கானை

| | |
|---|---|
| 196006 ஏ | 176619 ஏ |
| 186860 ஏ | 189321 ஏ |
| 189321 பி | 189324 ஏ |
| 189384 பி | 189324 சி |
| 190467 ஏ | 190467 பி |
| 190467 சி | 190467 டி |
| 190679 ஏ | 191821 ஏ |
| 191867 ஏ | 192469 ஏ |
| 193510 ஏ | 193511 ஏ |
| 194317 ஏ | 194463 ஏ |
| 194463 பி | 194881 ஏ |
| 194948 ஏ | 194949 ஏ |
| 195065 ஏ | 195066 ஏ |
| 195066 பி | 195139 ஏ |
| 195139 பி | 195836 ஏ |
| 195846 ஏ | 195846 பி |
| 195846 சி | 195846 டி |
| 195846 ஈ | 195846எப் |
| 195906 ஏ | 195907 ஏ |
| 195907 பி | 195943 ஏ |
| 195981 ஏ | 195983 ஏ |
| 195996 ஏ | 196036 ஏ |
| 197189 ஏ | 197189 பி |

### நல்லூர்

| | |
|---|---|
| 172735 ஏ | 172735 பி |
| 172735 சி | 172735 டி |
| 172859 ஏ | 173026 ஏ |
| 189513 ஏ | 191916 ஏ |
| 191973 ஏ | 192287 ஏ |
| 192362 ஏ | 192404 ஏ |
| 193535 ஏ | 193535 பி |
| 193535 சி | 193535 டி |
| 193535 ஈ | 193535எப் |
| 193570 ஏ | 193570 பி |
| 193643 ஏ | 193730 ஏ |
| 193730 பி | 194195 ஏ |
| 194195 பி | 194232 ஏ |
| 194232 பி | 194242 ஏ |
| 194242 பி | 194242 சி |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 170368 ஏ | 170368 பி |
| 175914 ஏ | 186859 ஏ |
| 186859 பி | 186859 சி |
| 186859 டி | 187028 ஏ |
| 187028 பி | 187028 சி |
| 187077 ஏ | 183077 பி |
| 191978 ஏ | 192474 ஏ |
| 192474 பி | 193518 ஏ |
| 193518 பி | 193518 சி |
| 194376 ஏ | 194376 பி |
| 194946 ஏ | 194946 பி |
| 194988 ஏ | 195029 ஏ |
| 195029 பி | 195058 ஏ |
| 195110 ஏ | 195110 பி |
| 195138 ஏ | 195145 ஏ |
| 195145 சி | 195145 டி |
| 195582 பி | 195852 ஏ |
| 195963 ஏ | 196019 ஏ |
| 196040 ஏ | 196040 பி |
| 196096 ஏ | 197118 ஏ |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 192370 ஏ | 192370 பி |
| 194345 ஏ | 194345 பி |
| 194353 ஏ | 196100 ஏ |

### உடுவில்

| | |
|---|---|
| 186764 ஏ | 187070 ஏ |
| 191772 ஏ | 191946 ஏ |
| 192019 ஏ | 193724 ஏ |
| 194479 ஏ | 194479 பி |
| 194479 சி | 194938 ஏ |
| 194938 பி | 195050 ஏ |
| 195109 ஏ | 195850 ஏ |
| 195853 ஏ | 195881 ஏ |
| 195881 பி | 195882 ஏ |
| 195897 ஏ | 195897 பி |
| 195897 சி | 195898 ஏ |
| 195913 ஏ | 195913 பி |
| 195920 ஏ | 195929 பி |
| 196006 பி | 196074 ஏ |

## கைகொடுத்தல் நிதி வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட மாணவர் ஒன்றியத்தின் கைகொடுத்தல் திட்டத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட நிதி, காணாமற் போனவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த பாடசாலைப் பிள்ளைகளுக்கு வழங்கும் நிகழ்வு நாளை புதன்கிழமை பி. ப 2.00 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையும் சிறப்பு விருந்தினராக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடாதிபதி எம் நடராஜசுந்தரமும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ)

## மாதாந்தக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பன்னாலை சிக்கனக் கடனுதவுக் கூட்டுறவுச் சங்கத்தின் மாதாந்தப் பொதுக் கூட்டம் எதிர் வரும் 5 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2 30 மணியளவில் பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயத்தில் தலைவி க.கமலாம்பிகை தலைமையில் நடைபெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து பன்னாலை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரின் ஏற்பாட்டில் மிதி வெடி விழிப்புணர்வு சம்பந்தமான கருத்தரங்கொன்றும் அன்றைய தினம் நடைபெறவுள்ளது. (உ-2)

## நிர்வாக சபைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை மேற்கு சிக்கனக் கடனுதவுக் கூட்டுறவுச் சங்கத்தினது 72வது வருடாந்த பொதுக் கூட்டமும் நிர்வாக சபைத்தெரிவும் அண்மையில் நடைபெற்றது.

நடப்பாண்டிற்கான நிர்வாக சபை உறுப்பினர்கள் விபரம் வருமாறு தலைவராக இ. சண்முகராஜா, செயலாளர் க. காங்கேசன், பொருளாளராக க. விக்கினேஸ்வரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (உ-2)

## இன்று ஒரு தகவல்

# அவிழ்ப்பது சுலபமாகும் அள்ளிஅடைப்பது கடினம்

துறவி ஒருவரின் மதிப்பைக் குறைக்கும் வண்ணம் அவரைப்பற்றித் தாறுமாறான பொய்ச் செய்திகளை அவதூறாகப் பரப்பிக்கொண்டிருந்தான் ஒருவன். இப்படியே சிறிதுகாலம் சென்றது. நாளாக ஆக அவன் மனச் சாட்சியே அவனைத் துன்புறுத்தியது. எப்படியேனும் துறவியிடம் உண்மையைச் சொல்லி மன்னிப்புப் பெற வேண்டும்என்று நினைத்தான் அவன், துறவியிடம் வந்தான் அவன். தான் செய்ததை எல்லாம் அவரிடம் கூறினான். என்ன தண்டனை தந்தாலும் ஏற்றுக்கொள்வதாகச் சொன்னான்.

துறவி அவனைப்பார்த்து 'ஊரில் எல்லோரும் கூடும் பொது இடத்திற்கு உன்வீட்டிலிருந்து தலையணை ஒன்றை எடுத்துச் செல். அதைக் கிழித்து அதனுள் இருக்கும் பஞ்சை எல்லாம் அங்கேயே பறக்கவிட்டுவிட்டு இங்கே திரும்பு' என்றார். தான் செய்த பாவத்திற்கு இவ்வளவு எளிமையான பரிகாரமா? என்று நினைத்த அவன் துறவி சொன்னவாறே செய்துவிட்டு அவரிடம் திரும்பினான். துறவியைப் பார்த்து 'ஐயா நீங்கள் சொன்னவாறே செய்துவிட்டேன். இன்னும் ஏதேனும் செய்யவேண்டுமா?' என்று பணிவாகக் கேட்டான். அதற்குத் துறவி 'நீ பஞ்சினைப் பறக்கவிட்ட இடத்திற்கு மீண்டும் செல். காலித் தலையணை உறையில் அவற்றைப் பழையபடி அடைத்துக்கொண்டுவா' என்றார்.

'ஐயா! யாராலும் செய்ய முடியாத செயல் அல்லவா இது. அந்தப் பஞ்சுத்துகள் யாவும் இந்நேரம் எல்லா இடங்களுக்கும் பறந்து சென்றிருக்குமே? என்னால் எப்படி மீண்டும் அவற்றை ஒன்று சேர்க்கமுடியும்? என்று கேட்டான் அவன்.

'தலையணையில் இருந்து பஞ்சுத்துகள் களைப்பறக்க விடுவது எளிது. மீண்டும் ஒன்று சேர்ப்பது கடினம். அதுபோல ஒருவரைப் பற்றிப் பொய்யாக அவதூறு பரப்பி விடுவது எளிது. அந்த அவதூற்றினைத் துடைப்பது மிகவும் கடினம். இதை இப்பொழுது நன்கு புரிந்து கொண்டிருப்பாய். இனியாவது பிறரைப்பற்றி அவதூறு பேசாதே' என்று அறிவுரை கூறி அனுப்பிவைத்தார் துறவி.

-பேராசிரியர் எ. சோதி-

# மண்ணெண்ணெய் அருந்தும் சிறுவர் தொகை குடாநாட்டில் அதிகரிப்பு

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் தவறுதலாக மண்ணெண்ணெய் குடிக்கும் சிறுவர்களின் தொகைஅதிகரித்து வருவதாக யாழ். போதனா வைத்தியசாலையின் குழந்தைகளுக்கான வைத்திய நிபுணர் கலா சோமசுந்தரம் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்; மண்ணெண்ணெய் குடித்து வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்காக வாரத்தில் இரு சிறுவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர்

சிலசமயங்களில் இச் செயல் காரணமாக மரணம் கூட நிகழ்கின்றது எனக் குறிப்பிட்ட வைத்திய நிபுணர்,

குழந்தைகள் மண்ணெண்ணெய்யைத் தவறுதலாகக் குடித்துவிட்டால் குழந்தையை வாந்தி எடுக்கச் செய்ய வேண்டாம் என்றும் தேங்காய்ப்பாலைப் பருக்க வேண்டாம் எனவும் எச்சரித்துள்ளார்.

வாந்தி எடுக்கச் செய்வதாலோ அல்லது தேங்காய்ப் பாலைப் பருக்குவதாலோ குழந்தையை உடனடியாகக் காப்பாற்றிவிடமுடியாது எனவும் குறிப்பிட்டுள்ளதுடன், இது விடயத்தில் பொற்றோர், பாதுகாவலர்கள் மிகவும் அவதானமாக இருக்கவேண்டும் என்றும் மண்ணெண்ணெய்யை எக்காரணம் கொண்டும் சோடாப் போத்தல்களில் வைத்திருக்க வேண்டாம் எனவும் கேட்டுக் கொண்டுள்ளார்

யாழ்ப்பாண மாவட்டத்தில் தான் மண்ணெண்ணெய்யைத் தவறுதலாகக் குழந்தைகள் பருகும் வழக்கம் கூடுதலாகவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது (உ-77)

# கொழும்பிலிருந்து தேசிய அ. அட்டைகள் எடுத்து வரப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்களது 2 ஆயிரத்து 648 தேசிய அடையாள அட்டைகள், யாழ். செயலகத்திற்கு எடுத்து வரப்பட்டுள்ளதாக ஈ. பி. டி. பியின் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கா. வே. குகேந்திரன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு எடுத்துவரப்பட்ட மொத்த அடையாள அட்டைகளில் ஆயிரத்து 974 அடையாள அட்டைகள் பிரதேச செயலகங்கள் வாயிலாகவும் 674 அடையாள அட்டைகள்பாடசாலை வாயிலாகவும் விண்ணப்பம் அனுப்பியவர்களுக்கானவை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலகங்களுக்குரிய அடையாள அட்டைகளாக யாழ் பிரதேச செயலகத்திற்கு 211 அட்டைகளும் நல்லூர் பிரதேச செயலகத்திற்கு 260 அட்டைகளும் கோப்பாய் பிரதேச செயலகத்திற்கு 159 அட்டைகளும், சங்கானைப் பிரதேச செயலகத்திற்கு 126 அட்டைகளும், சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்கு 171 அட்டைகளும்,

உடுவில் பிரதேச செயலகத்திற்கு 180 அட்டைகளும், தெல்லிப்பழை பிரதேச செயலகத்திற்கு 167 அட்டைகளும், பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கு 212 அட்டைகளும், கரவெட்டி பிரதேச செயலகத்திற்கு 143 அட்டைகளும், சாவகச்சேரி பிரதேச செயலகத்திற்கு 149 அட்டைகளும், மருதங்கேணி பிரதேச செயலகத்திற்கு 51 அட்டைகளும், வேலணை பிரதேச செயலகத்திற்கு 33 அட்டைகளும், ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்திற்கு 91 அட்டைகளும், நெடுந்தீவு பிரதேச செயலகத்திற்கு 21 அட்டைகளும், எடுத்து வரப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது (உ-10)

# யாழ்.கரபந்தாட்ட அணி தென்னிலங்கை விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கரபந்தாட்ட அணி இன்று தென் இலங்கை செல்லவுள்ளது.

இவ்வணி அங்கு சென்று அடுத்த மாதம் 2 ஆம், 3 ஆம் திகதிகளில் அங்கு தெரிவு செய்யப்பட்ட கரபந்தாட்ட அணிகளுடன் மோதவுள்ளது.

இவ்வணிக்கு மகிந்தனும் முகுந்தனும் பொறுப்பாகச் செல்லவுள்ளனர். தென் இலங்கை செல்லும் வீரர்களின் விபரம் வருமாறு.

ந.சாந்தரூபன், வ. செல்வமகிந்தன், இ.கேசவன், க.மகிந்தன், கு.சுந்தர்சன் ம.சந்திரகாந்தன், அ.அன்ரன் ஜெயின், அ.அன்ரன் றோய், ப. விமல்ராஜ், பொ. கிருபானந்தன் இ.பாஸ்கரன், வெ.சர்வானந்தன். (-க10)

# விறகு வெட்டியவர் மிதிவெடியில் காயம்

(யாழ்ப்பாணம்)

கோடரி நிலத்தில் விழுந்த போது அங்கிருந்த மிதிவெடி வெடித்ததில் விறகு வெட்டியவர் படுகாயமடைந்தார்.

நாயன்மார்கட்டுப் பகுதியில் கடந்த சனியன்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் முத்திரைச்சந்தியடியைச் சேர்ந்த எஸ். செல்வநாயகம் (வயது 51) என்பவரே காயமடைந்த நிலையில் யா/போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-2)

# புதிய பேருந்துகள் சேவையில் ஈடுபடுகின்றன

(துன்னாலை)

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் எடுத்துவரப்பட்ட புதிய பேருந்துகள் கடந்த சனிக்கிழமை முதல் சேவையில் ஈடுபட ஆரம்பித்திருப்பதாக வட பிராந்திய போக்குவரத்துச்சபை பொது முகாமையாளர் எஸ். மணிவாசகம் தெரிவித்தார்.

கடந்த சனியன்று வைபவரீதியாக இவற்றைக்கையேற்றபின் இவை போக்குவரத்து சேவைகளை ஆரம்பித்திருப்பதாகவும் கைதடி, ஆலங்குழாய் குறிகாட்டுவான், நெடுந்தீவு, அனலைதீவு, பருத்தித்துறை, காரைநகர் ஆகிய இடங்களுக்கான போக்குவரத்துச் சேவையில் இவை ஈடுபடுத்தப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, புதிய பேருந்துகள் சேவையாற்ற ஆரம்பித்ததையடுத்து போக்குவரத்து செய்வதில் பொதுமக்கள் அனுபவித்துவந்த சிரமங்கள் தீரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-41)

# சங்கானை ஆஸ்பத்திரியில் மருந்துக்குத் தட்டுப்பாடு

(சங்கானை)

சங்கானை அரசினர் வைத்தியசாலையில் சலரோக மாத்திரை உட்பட இன்னும் சில மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது.

இதனால் அங்கு தங்கிச் சிகிச்சை பெறுவோர் மற்றும் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுவோர், வெளியிடங்களிலுள்ள மருந்துக் கடைகளிலேலேமருந்துகளைப்பெற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (உ-123)

# கடைகளில் கள்வர் கைவரிசை

(கல்வயல்)

பருத்தித்துறை சிவன் கோவில் வடக்கு வீதியில் அருகருகே இருந்த இரு கடைகள் உடைக்கப்பட்டு திருடப்பட்டுள்ளன.

கடந்த சனியன்று இரவு வேளை ஜதுஷன் வீடியோ சென்ரர், சிவாமினி சொப் ஆகிய இரு கடைகளின் கூரைகளையும் பிரித்து உள்நுழைந்த திருடர்கள் பல ஆயிரம் ரூபா பெறுமதியான இலத்திரனியல் பொருட்கள், பல சரக்குச் சாமான்களைத் திருடிச்சென்றுள்ளனர் (உ-111)

# திருவிழிப்பு வழிபாடு

(யாழ்ப்பாணம்)

''பெந்தக் கோஸ்தே திருவிழிப்பு'' வழிபாடு எதிர்வரும் யூன்மாதம் 2 ஆம்திகதி இரவு 8. 00 மணியளவில் பண்டைத்தரிப்பு புனித பற்றிமா அன்னை யாத்திரைத் தலத்தில் ஆலயபங்குத்தந்தை அருட்திரு. பி. ஞானரட்ணம் அடிகளின்தலைமையில் இடம்பெறவுள்ளது. (க-07)

# தேர்த்தரிப்பிடம் அமைப்பு

(திருநெல்வேலி)

திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய வீதியில் புதிதாக தேர் தரிப்பு நிலையம் ஒன்று பல ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருகிறது. (உ)

# நிர்வாகசபை கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையங்களின் இணைப்புக்குழுவின் நிர்வாக சபைக் கூட்டம், கோப்பாய் சாயி சிறுவர் இல்ல மண்டபத்தில். ஜூன் மாதம் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10. 00 மணிக்கு இடம்பெறவுள்ளது. (உ)

# அபிவிருத்தி குழு அமைப்பு

(ஏழாலை)

யாழ். மலலாகம் மகாவித்தியாலய விளையாட்டு மைதானம் அபிவிருத்தி செய்யப்பட்ட வேண்டியதன் தேவை கருதி அண்மையில் அபிவிருத்திக் குழு ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. (உ-12)

# காணாமற்போனோர் பற்றிய விசாரணைகளுக்கு சமுகமளிக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் இருந்து 1996 - 1997 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் கீழ் வரும் காணாமற் போனவர்கள் தொடர்பாக அவர்களுடைய உறவினர்கள் மற்றும் சாட்சிகளை காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை நடாத்தி வரும் விசேட புலனாய்வுப் பிரிவினர் அழைத்துள்ளனர்.

காணாமற் போனவர்கள் மற்றும் அழைக்கப்பட்டவர்களது விபரம் வருமாறு.

★ வல்லிபுரம் பாஸ்கரன் (பி-85)

மறுவன்புலோ, சாவகச்சேரி

இவரின் உறவினர்கள தகவல் தெரிந்தவர்கள் சமுகம் தரவும்.

★ தங்கவடிவேலு ராஜேந்திரன் (பி-92)

அல்வாய் பருத்தித்துறை

சாட்சி: சுப்பிரமணியம் இராசாவின் தோட்டம் யாழ்ப்பாணம் (யாழ்சாவோதய ஊழியர்)

★ சுரேஸ்வரன் சுமதி (பி-67)

ஊரெழு சுன்னாகம்.

முறைப்பாடு : கந்தையா சொக்கலிங்கம்

சாட்சி : கிருஸ்ணபிள்ளை அயாலை, கொழும்புத்துறை

★ துரை தங்கத்துரை (பி-68)

மூத்த விநாயகர் கோவிலடி கரணவாய்.

முறைப்பாடு : துரை மகேஸ்வரி

சாட்சிகள் : கந்தையா துரை அரவிந்தன் துரைராசா ஜெயலட்சுமி.

★ நந்தன் விமலதாஸ் (பி-46)

கரணவாய் மத்தி

முறைப்பாடு : கோவிந்தன் நந்தன்

சாட்சிகள் : முத்துக்குமார் புவனேஸ்வரி, கதிர்காமம் சந்திரன், வைரமுத்து, சின்னத்துரை திவாகரன்

★ சுப்பிரமணியம் சுதாகரன் (பி-18)

பொன்னம்பலம் வீதி, அரியாலை.

முறைப்பாடு: சின்னத்தம்பி சுப்பிரமணியம

சாட்சிகள் : செல்வரத்தினம் சின்னத்தம்பி, சுப்பிரமணியம், சுப்பிரமணியம் கமலாதேவி. (உ-10)

# நாடக ஆற்றுகை

(ஈச்சமோட்டை)

யாழ். பல்கலைக்கழகத்தில் எதிர்வரும் வியாழக்கிழமை மாலை 4. 00 மணிக்கு 'சரிக்கும் கண்ணீர் கடலலைகள்' எனும் நாடக ஆற்றுகை இடம்பெறவுள்ளது. (உ-59)

# கட்டாக் காலிகளால் தொல்லை

(துன்னாலை)

கரவெட்டிப் பகுதியில் கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை அதிகரித்திருப்பதாக அப்பகுதிபொதுமக்கள் சம்பந்தப்பட்ட விவசாய சம்மேளனத்திடம்முறைப்பாடு செய்துள்ளனர். (உ-41)

# திருத்தம்

(யாழ்ப்பாணம்)

யா/ போதனா வைத்தியசாலை சத்திர சிகிச்சைக் கூடத்துக்கு முன்பாகவுள்ள அதி தீவிர சிகிச்சைப் பிரிவு தற்போது திருத்தியமைக்கப்படுகின்றது. (உ-104)

## மீட்புப் பணியில் ஈடுபட்ட கடற்படை அதிகாரிகள் கடலில் மூழ்கி மரணம்

(பாங்கொக்)
தாய்லாந்து கடற்பரப்பில் உலங்கு வானூர்தி ஒன்று விபத்துக்குள்ளானதில் 7 கடற்படை அதிகாரிகள் கடலில் மூழ்கிப் பலியாகினர்.

தாய்லாந்தின் வளைகுடாப் பகுதியில் நீரில் மூழ்கி மரணமான மீனவர்களின் சடலங்களை மீட்கும் பணியில் ஈடுபடச் சென்ற போதே உலங்கு வானூர்தி விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, மீனவர்கள் ஐவரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி கடற்படை அதிகாரிகளது சடலங்களை மீட்க முடியாதுள்ளதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (உ-7)

## மகனின் இரத்தத்தால் அபிஷேகம் செய்த தாய்

(புதுடில்லி)
பெற்ற மகனின் கழுத்தை வெட்டி கடவுளுக்கு அர்ப்பணித்த சம்பவம் ஆந்திரப் பிரதேசத்தில் நிகழ்ந்துள்ளது.

ஹெச்சம்மா என்னும் பெண்மணி தனது பதினொரு வயது நிரம்பிய மகனின் கழுத்தை வெட்டி, இரத்தத்தை எடுத்து கடவுளுக்கு நைவேத்தியமாகச் சமர்ப்பித்துள்ளார்.

துண்டாடப்பட்ட தலையுடன் ஹெச்சம்மா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (செ)

## ஆசியாவின் தூய நாடாக சிங்கப்பூரை அறிவிப்பு

(லண்டன்)
ஆசியாவில் சூழல் மாசடைதலில் முன்னணியில் உள்ள நாடென ஆய்வுகள் மூலம் இந்தியா இனம் காணப்பட்டுள்ளது.

இதேவேளை, ஆசியாவில் மிகவும் தூய நாடாகவும், சூழலை எந்த ரீதியிலும் பாதிக்காத செயற்பாடுகள் கொண்ட நாடாகவும் சிங்கப்பூர் விளங்குவதாக ஆய்வறிக்கைகள் மூலம் தெரியவந்துள்ளது. (உ-7)

## இந். வெளியுறவு அமைச்சர் ரஷ்யா பயணம்

(புதுடில்லி)
இராணுவத் தொழில் நுட்ப ஒத்துழைப்புக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங் ரஷ்யா செல்லவிருக்கிறார்.

அங்கு அடுத்த மாதம் மூன்றாம் திகதி ரஷ்ய வெளியுறவு அமைச்சருடனும் மற்றும் அதிகாரிகளுடனும் தனித்தனியாகப் பேச்சுக்கள் நடத்த இருக்கிறார்.

செப்டெம்பரில் ரஷ்யாவில் நடைபெறவிருக்கும் பாதுகாப்பு உச்சி மாநாடு பற்றி இக் கூட்டுக் கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்படும்.

இதற்கிடையில் ரஷ்ய வெளியுறவு அமைச்சர் இந்தியா செல்லவிருப்பதாக மாஸ்கோ செய்திகள் தெரிவிக்கின்றன. (து)

## உத்தரப் பிரதேசத்தில் சூறாவளி 16 பேர் பலி வீடுகள் பல சேதம்

(புதுடில்லி)
உத்தரப் பிரதேசத்தில் சூறாவளி மற்றும் பெரும் மழைகாரணமாக 16 பேர் பலியாகியுள்ளனர்.

பலத்த மழையுடன் சூறாவளியும் வீசியதால் கிராமங்கள் பல பாதிக்கப்பட்டுள்ளன. மரங்கள் முறிந்தும் பாறியும் உள்ளதுடன் வீட்டுக் கூரைகள் சேதமடைந்துள்ளன.

மின்கம்பங்கள் சரிந்துள்ளதால் மின்சாரம் ஆங்காங்கே தடைப்பட்டுள்ளன.

சூறாவளியால் கட்டடங்கள் இடிந்து பத்துக்கு மேற்பட்டோர் இறந்துள்ளனர்.

மீட்புப்பணிகள் தொடர்வதாகவும் இறந்தோர் குடும்பங்களுக்கு ஐம்பதினாயிரம் ரூபா நஷ்டஈடு வழங்கவிருப்பதாகவும் மாநில அரசு அறிவித்துள்ளது. (து)

உலக தரிசனம்

## ஜி-15 நாடுகளின் மாநாடு இந்தோனேஷியாவில்

பத்தொன்பது நாடுகள் அங்கம் வகிக்கும் ஜி-15 நாடுகளின் மகாநாடு ஜகார்த்தாவில் நடைபெற இருக்கிறது.

இந்த மகா நாட்டில் கலந்து கொள்ளும் பொருட்டு இந்தியத்துணை ஜனாதிபதி கிருஷ்ணகாந் தலைமையிலான குழு அங்கு சென்றுள்ளது.

வளர்ந்து வரும், வளர்ச்சியடைந்த நாடுகள் இதில் முக்கியமாக அங்கம் வகிக்கின்றன.

கணனி மற்றும்சாதனங்கள் பயன் படுத்துவது தொடர்பான விடயங்கள் முக்கியமாக கலந்தாலோசிக்கப்படும்.

நாளைபுதன் கிழமை ஆரம்பமாகும் ஆறாவது மகா நாட்டில் வெளியுறவு அமைச்சர்கள் கலந்து கொள்கின்றனர்.

செப்டெம்பரில் உலக வர்த்தக அமைப்புக் கூட்டம் நடைபெற இருக்கும் வேளையில் இம் மாகா நாடு முக்கியம் பெறுகின்றது. (து)

## இருதரப்பும் பொறுப்புடன் நடந்தால் பலஸ்தீனப்பகுதியில் அமைதிதிரும்பும்

### அமெரிக்க தூதுவர் நம்பிக்கை தெரிவிப்பு

(வாஷிங்டன்)
பலஸ்தீனத் தீவிரவாதிகள் ஸ்ரேலுக்கெதிராக தாக்குதல் நடத்துவதைத் தடுக்க பலஸ்தீனத் தலைவர் ஜசிர் அரபாத் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மத்திய கிழக்கிற்கான அமெரிக்கத் தூதுவர் வில்லியம் வேட்ஸ் கேட்டுள்ளார்.

ஜெருசலேம் நகரில் அடுத்தடுத்து இரண்டு கார்க்குண்டு வெடிப்புச் சம்பவங்கள் நடைபெற்றதையடுத்து வேட்ஸ் இவ்வாறு கேட்டுள்ளார்.

மேற்படி கார்க்குண்டு வெடிப்புச் சம்பவங்களில் குறைந்தது ஐவர் காயமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜஸிர் அரபாத்துடன் பலஸ்தீனிய - இஸ்ரேலிய சமாதான முயற்சி பற்றி பேச்சு நடத்திய வில்லியம் வேட்ஸ் தற்போது இஸ்ரேலிய பிரதமர் ஏரியல் ஷரோனை சந்தித்து மேற்படி அமைதி முயற்சி குறித்து பேச்சு நடத்தி வருவதாகத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இரு தரப்பினரும் மாறி மாறி தாக்குதல் நடத்திக் கொண்டு பரஸ்பரம் ஒருவரை யொருவர் குற்றம்சாட்டுவதில் எவ்வித பிரயோசனமும் இல்லை. இப் பிரதேசங்களில் அமைதி ஏற்பட வேண்டுமாயின் இரு தரப்பினருமே அக்கறையுடன் நடந்து கொள்ளல் அவசியமானதென வில்லியம் வேட்ஸ் மேலும் தெரிவித்துள்ளார். (உ-9)

## உகண்டாவின் சமூக அபிவிருத்திக்கு அமெ. உத்தரவாதம்

(வாஷிங்டன்)
ஆபிரிக்கா கண்டத்தின் பல நாடுகளுக்கும் அரச முறைப் பயணத்தை மேற் கொண்டுள்ள அமெரிக்கா அரசுத்துறைச் செயலர் கொலின்பவுல் சூடான், கொங்கோ குடியரசு நாடுகளில் தோன்றியுள்ள பிணக்குகள் தொடர்பாகப் பேசுவதற்கு உகண்டா ஜனாதிபதியைச் சந்தித்துள்ளார்.

உலகிலேயே எய்ட்ஸ் நோயால் அதிகளவில் பாதிக்கப்பட்ட நாடுகளில் ஒன்றான உகண்டாவில் தற்போது எய்ட்ஸ் தொடர்பாக ஏற்படுத்தப்பட்டுள்ள விழிப்புணர்ச்சியை கொலின்பவுல் பாராட்டியுள்ளார்.

உகண்டாவின் சமூக அபிவிருத்திக்கு தம்மாலான உதவிகளை அமெரிக்கா செய்யும் எனவும் கொலின் பவுல் உத்தரவாதம் அளித்துள்ளார். [உ-9]

## அரசியல் கைதிகளின் உரிமைகளை வலுப்படுத்தும் மசோதாவுக்கு அங்கீகாரம்

(தெஹ்ரான்)
அரசியல் குற்றங்களை வரையறுத்து அரசியல் கைதிகளின் உரிமைகளைவலுப்படுத்தும் மசோதா ஒன்றின் முதலாவதுவரைவை ஈரானிய நாடாளு மன்றம் அங்கீகரித்துள்ளது.

1979 ஆம் ஆண்டு நடைபெற்ற இஸ்லாமியப் புரட்சிக்குப் பின்னர், ஈரான் நாடாளு மன்றத்தால் இது தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட முதலாவது மசோதா இது என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் மேற்படி மசோதாவிற்கு ஈரானில் உள்ள சிறுபான்மையினர் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இம் மசோதாவின்படி பொது மக்கள் பார்க்கக் கூடியதாகவே வழக்கு விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-9)

## இந்தியப் பிரதமருக்கு மூட்டு மாற்று சிகிச்சை அடுத்த மாதம் மும்பையில்

[புதுடில்லி]
இந்தியப் பிரதமர் அடல் பிஹாரிவாஜ்பாய்க்கு அடுத்த மாதம் மூட்டு மாற்றும் சிகிச்சை நடைபெற இருக்கிறது.

மும்பை பிறிட்ஜ்ஹண்டி மருத்துமனையில் நடைபெற இருக்கும் மூட்டு மாற்றுச் சிகிச்சையைச் செய்வதற்கு அமெரிக்காவிலிருந்து சத்திர சிகிச்சை நிபுணர் ரணாவத் சித்தரஞ்சன்வரவிருக்கிறார்.

தற்போது ஹிமாலயப் பிரதேசத்தில் ஓய்வெடுக்கும் பிரதமர் வாஜ்பாய்க்கு அடுத்த மாதம் 7 ஆம் திகதி மும்பையில் சத்திர சிகிச்சை இடம் பெற இருக்கிறது. (து)

## மணிப்பூரில் அரசியல் நெருக்கடி ஆட்சி அமைப்பதில் இழுபறி

(புதுடில்லி)
மணிப்பூர் மாநிலத்தில் புதிய அரசு அமைக்க தம்மை அழைக்கும்படி முற்போக்கு முன்னணி ஆளுநரை கோர இருப்பதையிட்டு பெரும் நெருக்கடி நிலை தோன்றியுள்ளது.

இதனால் அவசர கூட்டத்துக்காக புதுடில்லி சென்றிருக்கும் சமதாக் கட்சி பாரதிய ஜனதாக் கட்சியுடன் பேச்சு வார்த்தை நடத்த இருக்கின்றது. பா. ஜ கட்சி குழுவிற்கு ஜனாக்கிருஷ்ண மூர்த்தியும் சமதாக்கட்சிக் குழுவிற்கு பி கிருஷ்ணாராவும் தலைமைதாங்கி பேச்சுவார்த்தையில் ஈடுபடவிருக்கின்றனர்.

இதேவேளை, முற்போக்கு முன்னணி கட்சிகளின் தலைவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியே ஜனாக் கிருஷ்ணமூர்த்திக்கு ஆர். கே. தொரேந்திரசிங்கை முதலமைச்சராக்கும்படி கடிதம் எழுதியுள்ளனர்.

பாரதிய ஜனதாக் கட்சி என்ன முடிவு எடுத்தாலும் தாம் ஆட்சி அமைக்கக் கோரப் போவதாக முற்போக்கு முன்னணியினர் கூறி வருகின்றனர். (து)

## நேபாளத்தில் ஆர்ப்பாட்டம் இருவர் பலி இருபது பேர் காயம்

நேபாளத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வேலை நிறுத்த, ஆர்ப்பாட்டங்களின் போது பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் இடம் பெற்ற மோதலில் இருவர் கொள்ளப்பட்டதுடன் பொலிஸார் உட்பட 20 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

மேற்படி ஆர்ப்பாட்டத்தின் போது அரச அலுவலகங்கள் மீது கற்கள் வீசப்பட்டதுடன் புகை வண்டிகளும் தீ வைத்துக் கொழுத்தப்பட்டன.

இவ் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக இது வரை 50 இற்கும் அதிகமானவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நேபாளப் பிரதமர் பதவி விலக வேண்டுமென எதிர்க்கட்சிகள் அடிக்கடி கோரி வருகின்றமை தெரிந்ததே.

இவ் அரசியல் குழப்ப நிலைதான் மேற்படி வேலை நிறுத்தப் போராட்டத்திற்கும் காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-9)

## அடுத்தடுத்து அமைச்சர்கள் பலி

(ஹராரே)
சிம்பாவேயில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில் அந்நாட்டு பாதுகாப்புத்துறை அமைச்சர் மோமட் மகேஸீஸ பலியானார்.

இதே வேளை, கடந்த 2 மாதங்களில் அந்நாட்டு இரு அமைச்சர்கள் வாகன விபத்தில் பலியானமை குறிப்பிடத்தக்கது. (உ-7)

எதிரதாக் காக்கும்
அறிவினர்க்(கு) இல்லை
அதிரவருவதோர் நோய்

குறள்

## வலம்புரி

### சமாதி கட்டும் முயற்சி

நோர்வேயின் சமாதான முயற்சியை இலங்கை அரசும் பௌத்த பேரினவாதிகளும் அசமந்தப் போக்கிலேயே நோக்குகின்றன. அதனாலேயே நோர்வேத் தூதுவர் எரிக்சோல் ஹெய்மை இலங்கைக்குள் காலடி எடுத்து வைக்கவிடக்கூடாதென்று கூறியுள்ளனர்.

சமாதானத்தை ஏற்படுத்தி நம்நாட்டில்சமாதானத்தை நிலைநாட்டவும் அப்பாவி மக்களின் உயிர்களைப் பாதுகாப்பதற்காகவும் தூதுமேற் கொண்டுள்ள எரிக்சோல்ஹெய்மின் காலடி நாட்டிற்குள் வைக்கவிடக்கூடாதென்று பௌத்த பேரினவாதிகள் கூறியுள்ளாரெனில்,

அவர்கள் ஈழத்தமிழர்களை காலாகாலமாக வதைத்து - அவர்களின் உடமையை சுருட்டி அடிமைத்தனமாக வைத்திருக்கிறார்களென்பது வெளிப்படையாகிவிட்டது.

சமாதான தூதுவரை வரவேற்பதும்அவருக்குரிய கௌரவத்தை வழங்குவதும், அரசகடமை.ஆனால் இது தென்னிலங்கைப் பௌத்த பீடத்தினருக்கும் பேரினவாதிகளுக்கும் புரியாதென்பது உலகத்திற்குப் புரிந்திருக்கும்

தம்பிள்ளைகளை படையில் பறிகொடுத்த ஏழை பெற்றோர் நாளும் கண்ணீர் வடிக்க - காணாமல் போனபடையினரின் பெற்றோர்கள் ஊர்வலமும், உண்ணாநோன்பும் நடத்திக் கொண்டிருக்க,

யுத்தமென்றால் என்ன என்று எதுவுமே தெரியாதவர்கள் மாடமாளிகைகளிலிருந்து கொண்டு அறிக்கைகள் விடுவது தென்னிலங்கையிலுள்ள ஏழைச் சிங்கள இளைஞர்களுக்குச் சமாதி கட்டும் முயற்சி என்பது மறுக்கமுடியாத உண்மை.

இச்சந்தர்ப்பத்தில்தென்னிலங்கைச் சிங்கள மக்கள் ஒன்று திரண்டு சமாதானப்பேச்சு புலிகள்மீதான தடைநீக்கம் ஆகியவற்றை வலியுறுத்தி பேரினவாதிகளின் இனத் தீக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

யுத்தத்தால் அழிவுதான் மிச்சமென்பதை சிங்கள மக்கள் உணர்ந்து கொண்டால் தமிழ் மக்கள் உரிமையோடு - சுதந்திரத்தோடு வாழ்வதை விரும்பவும் அதற்காகப் பாடுபடவும் வேண்டும்.

இவ்வாறு சிங்களப் பொதுமக்கள் எப்போது வீதியில் இறங்கி பேரினவாதிகளின் கொட்டம் அடக்குகிறார்களோ, அன்றுதான் அவர்களுக்கு ஞானம் கிடைக்கும்.

# இருதய நோய்களை இல்லாது ஒழிப்பதற்கு சுறுசுறுப்பும் உணவுக் கட்டுப்பாடும் அவசியம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

### மன அமைதி முக்கியம்

நம்முடைய மன நிலைக்கும் இருதயநோய்க்கும்நெருங்கிய தொடர்பு உண்டு. குறிப்பாக வயதான பிறகு இந்த மனப்பக்குவம் மிகவும் அவசியம். மன உளைச்சல், தொடர்ந்து கவலைப்படுவது, மனக்குழப்பத்தால், படபடப்பு ஏற்படுவது ஆகியவை தவிர்க்கப்பட வேண்டியவை. லேசான பொழுது போக்குகள், மனத்திற்கு உற்சாகந்தரும் விளையாட்டுகள், குடும்பத்தாருடன் மனங் கலந்து பேசிப்பழகுவது, எதையும் பரந்த மனப்பான்மையுடன் ஏற்றுக்கொண்டு, கோபம், படபடப்பு, மனக்குமுறல் ஆகியவற்றைத் தவிர்ப்பது ஆகியவைஎல்லாம் இருதயத்துக்கு ஆறுதலாக, மாறுதலாக அமையக் கூடியவை. நமது முன்னோர்கள் இதற்காகவே வயதானவர்கள் மனத்தைப்பக்குவப்படுத்தும் வழிபாடு, தியானம் போன்றவற்றில்ஈடுபடவேண்டும் என்றுரைத்தார்கள். உலக ஆசைகளில் பற்றுக் குறைய வேண்டும் என்று வகுத்துவைத்தார்கள்:

நாம் சாப்பிடுவதை அளவாகவும் இடைவெளிவிட்டும் சாப்பிடவேண்டும். காலையில் வெறும் வயிற்றோடு இல்லாமல் லேசாகச் சிற்றுண்டி சாப்பிடுவது நல்லது. மாலையில் வெளியே நடந்து திரும்பியபின் லேசாக உணவு அருந்தி முடித்துக் கொள்வது நல்லது. படுக்கப்போகும் போது வயிறு லேசாக இருப்பது நல்லது. சாப்பிடும் போது, சுவைத்து மெதுவாக, கொஞ்சம் கொஞ்சமாகச் சாப்பிடவேண்டும். இன்னும் சிறிது சாப்பிடலாம் என்ற நிலையிலேயே நிறுத்திவிடுவது நல்லது.

### எண்ணெய் வகை

உணவில் கிழங்குகளை நீக்கிநார்ச்சத்துள்ள உணவை மேற்கொள்ளுவது நல்லது. கொழுப்புச் சத்து மிகுந்த நெய், வெண்ணெய், மாமிசம், வறுத்த பண்டங்கள், எண்ணெயில் பொரித்தவை ஆகியவற்றை மிகவும் அளவாக ஏற்கவேண்டும். கூடியவரை ஒதுக்கமுற்படுவது நல்லது: தேங்காய், உறையக் கூடிய எண்ணெய் வகைகள் பாலாடைக்கட்டி, இனிப்புகள் ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும். எண்ணெய் வகைகளில் கொலஸ்ட்ரோல்அளவு குறைந்த சூரியகாந்தி எண்ணெய், நல்லெண்ணெ, ஒலிவ் எண்ணெய் ஆகியவை மேலானவை, செம்பருத்தி மலர்களில் இரண்டை எடுத்து தண்ணீரில் போட்டுக் கொதிக்கவைத்து அந்த நீரை அருந்தினால் நல்லது என்று சித்த மருத்துவம் கூறுகிறது அதேபோலத் தாமரை மலர்களை நிழலில்உலர்த்திக் காயவைத்துப் பொடியாக்கிக் காலையிலும், மாலையிலும் ஒரு கிராம் சாப்பிட்டு வருவதும் நல்லது. பூண்டு, மஞ்சள் ஆகியவை உணவில் சேருவது நல்லது.

ஐம்பது வயதிலிருந்து ஓரளவு இருதயத்திற்குரிய சோதனைகளை டாக்டரின் ஆலோசனையுடன் மேற்கொள்வது நல்லதற்காப்பு முறையாகும்.

இருதயத்தின் மின் அலைகளை ஈ.சி.சி மூலம் தெரிந்து கொள்ளலாம். இருதயத்துக்கு ஒலி அலைகளை அனுப்பி எதிரொலி அலைகளிலிருந்து மதிப்பீடு செய்வது எக்கோ - கார்டியோகிராம். இருதயத்துக்கு இரத்தம் வழங்கும் வழிகளை, சாயப்பொருளை உள்ளே அனுப்பிச் சோதிக்கிறார்கள். அல்ட்ரா சவுண்ட் மூலம்இருதயத்தின் திறனை மதிப்பீடு செய்யலாம். இருதயத்தின் அமைப்பு,வயதுக்கேற்ற இயக்கம், தளர்ச்சி செயல் திறமையில் குறைகள், இரத்த ஓட்டம் ஆகிய எல்லாவற்றையும் மதிப்பீடுசெய்யும் நுட்பமான கருவி அளவு முறைகள் இன்று உள்ளன. டாக்டரின் ஆலோசனைப்படி இவற்றை மேற்கொள்வது நமக்குத் தற்காப்பாக அமையும்.

### முற்றிய நிலையில் அறுவை சிகிச்சை

சில கருவிகளின் மூலம், லேசான பயிற்சிகளின் மூலம் நம்முடைய செயல்த்திறன் மதிப்பிடும் சோதனைகள் மூலம் இருதயத்தின் திறனை மதிப்பிடுகிறார்கள். வேண்டிய அளவுக்குக் குறைவாக இருந்தால் எச்சரிக்கை செய்கிறார்கள்.. அடிக்கடிசோர்வு ஏற்படுவது, படபடப்பு மூச்சுத் திணறுவது ஆகியவை சில அபாய எச்சரிக்கைகள், டாக்டரின் ஆலோசனையை இந்த நிலையில் உடனே பெற வேண்டும். சில மருந்துகள், சில தற்காப்பு முறைகள் ஆகியவற்றை அவர் ஆரம்பத்தில் சொல்லி அறிவுரை கொடுப்பார். இவற்றை மேற்கொள்வது நல்லது. ஆனாலும் முற்றிய நிலையில் அறுவை சிகிச்சையோ அல்லது வேறு அவசர சிகிச்சைகளோ தேவைப்படும்:

இதில்இருதயத்தசை இரத்த நாளங்களில் பக்கவழி அறுவைச் சிகிச்சை என்பதுஇன்று பெரும்பாலும் செய்யப்படுகிறது, மருத்துவர்கள் மாரடைப்புஎன்ற இருதயப் பாதிப்பு ஏற்படும் வாய்ப்பு சோதனைகள் மூலம் கண்டு பிடிக்கப் பட்டால் இதைச் செய்து கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தி கூறுவார்கள்.

இந்த மாற்று வழிச்சிகிச்சைக்கு நமதுஉடம்பிலிருந்தே மாற்று இரத்த நாளங்களை எடுத்துப்பொருத்து வார்கள் கணுக்கால் அருகிலிருந்து எடுக்கும் நாளத்தையோ, மார்பு இரத்த நாளத்தையோ பயன் படுத்துவார்கள் இதனால்இருதயத்தசைப் பகுதிகளுக்குப் புதுவாழ்வு கிடைக்கிறது இந்தச் சிகிச்சையின் மூலம் மேலும் பத்து ஆண்டுகளுக்குக் குறையாமல் இருதயத்துக்குப் புத்துயிர் ஊட்ட முடியும் என்று மதிப்பிடுகிறார்கள்.

இந்த அறுவைச்சிகிச்சையை நுட்பமாகச் செய்யும் போது 100க்கு 98 பங்கு இருதயம் வெற்றி கரமாகப்புதுப்பிக்கப் படுகிறது. என்று மதிப்பிடுகிறார்கள். இந்தசிகிச்சையைச் செய்வதால் இருதயப் பாதிப்பை 100 க்கு 95 பங்கு தவிர்க்கலாம் என்றும் மதிப்பிடுகிறார்கள். இதற்கு பின் அவர்களால் இயல்பான வாழ்க்கையை மேற்கொள்ள முடிகிறது. இந்த நலன்களைக் கருதும்போது,

இந்த சிகிச்சையை அதனால் ஏற்படக் கூடிய பெரும் செலவை மேற்கொள்ளக் கூடியவர்கள் செய்து கொள்வது உசிதமே என்று முடிவு செய்யலாம்.

இருதயத்தசைகளில்,இரத்த நாளங்களில் ஏற்படும் இரத்த உறைவைநேரடியாகக் கரைக்கும் முறை, இருதயத் தசையைத் துளைத்து இரத்த ஓட்டத்தை உருவாக்கும் முறை ஆகியவையும் இருதயப் பாதிப்பை அளவிட்ட நிபுணரின் ஆலோசனைப்படி மேற்கொள்ளப்படுகின்றன இருதயப் பாதிப்பு நேர்ந்து

**எஸ். எல். எஸ்**

நன்றி

ஹெல்த்

சிகிச்சை பெற்ற பிறகும், இத்தகைய அறுவைச் சிகிச்சை மேற்கொண்ட பிறகும் பல ஆண்டுகள் உயிர் வாழ வேண்டிய அவசியம் பெரும்பாலான முதியவர்களுக்கு ஏற்படுகிறது. அத்தகைய வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய பாதுகாப்பு முறைகள் சில உண்டு. தவறான நம்பிக்கைகள் சிலவற்றைத் தவிர்க்க வேண்டியதும் உண்டு:

### தேகப் பயிற்சி

டாக்டரின் ஆலோசனைப்படி ஒரு மாதத்திற்குப் பிறகு கொஞ்சத் தூரம் மெதுவாக நடந்து பழகலாம். அதற்கு ஒரு மாதம் கழிந்த பிறகு காலையிலும், மாலையிலும் நடக்கப் பழக வேண்டும். நடக்க வேண்டும். செங்குத்தாக ஏறுவது,படிக்கட்டுகளில் ஏறுவது ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும், மலம் கழிக்கும் போது முக்கி வெளியேற்றக் கூடாது. பளு ஏற்பது, தூக்குவது ஆகியவை கூடாது.

டாக்டரின் ஆலோசனையுடன் படிப்படியாக அளவான தேகப் பயிற்சிகளை மேற்கொள்ளலாம். ஓரளவு மாடிப்படிகளில் ஏறலாம். அளவான தாம்பத்திய உறவை மேற்கொள்ளலாம். வழக்கமான வேலை, வேலைகளை மீண்டும் படிப்படியாகச் செய்யத் தொடங்கலாம். கார் ஓட்டுவது, ஓடுவது, கவலைப்படுவது, அச்சப்படுவது. கோபப்படுவது ஆகியவற்றைத் தவிர்ப்பது நல்லது மனம் அமைதியாக இருக்க வேண்டும் பொதுவாக உடல் நலம் சீராக இருக்க, அளவான உணவை. நேரம் அறிந்து உண்ணவேண்டும். மது, சிகரட் பிடிப்பது போதை மருந்துகள் சாப்பிடுவது. தகாத உடல் உறவுகள் ஆகியவற்றை நீக்கிவிட வேண்டும்.

இருதயப் பாதிப்பு இருந்து, சிகிச்சை பெற்றவர்கள் மீண்டும் இயல்பாக வாழலாம். அவர்கள பயந்து கொண்டு இரண்டாந்தர வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. இருதயப் பாதிப்பு ஏற்பட்ட பலர், அதன் பின் மற்றவர்களைக் காட்டிலும் அதிகமாக உயிர் வாழ்ந்திருக்கிறார்கள். பொதுவாக ஏற்புடைய பணிகளில் ஈடுபட்டு மனத்தை ஈடுபடுத்திக் கொள்வது நல்லது. வீட்டில் குடும்பத்தாருடன் மனம் கலந்து பழகி, வாய் விட்டுச் சிரித்து, லேசான பொழுதுபோக்குகளை மேற்கொண்டு, இனிய வாழ்க்கையை மேற்கொள்வதே மிகச் சிறந்தது,

உணவை அளவாகவும், நேரம்தவறாமலு உட்கொள்ளும் போது. கொழுப்புச் சத்தைக் குறைக்க வேண்டும். அசைவ உணவைக் காட்டிலும் சைவ உணவே மேலானது. நார்ச்சத்து மிகுந்த காய் கறிகள், ஊட்டம் நிறைந்த பழ வகைகள், கீரைகள், பட்டாணி, மொச்சை, சுண்டல், கடலை, பொட்டுக் கடலை போன்ற புரதம் நிறைந்த உணவுப் பொருட்களைச் சாப்பிடலாம் அடிக்கடி கோப்பி, தேநீர் அருந்த வேண்டாம். நீர்த்த மோர் சாப்பிடலாம். பால், தயிர், வெண்ணெய் ஆகியவற்றைத் தவிர்ப்பதே நலலது.

நல்ல தூக்கம், மனத்தை லேசாக்கும பொழுது போக்குகள் எளிய உடற் பயிற்சிகள், காற்று வீசும் பகுதியில் நடந்து வருவது,எளியகுடும்ப வேலைகள், புத்தகம் படிப்பது, குடும்பத்தருடன் பழகுவது. மனம் விட்டுப் பேசிச் சிரிப்பது ஆகியவைநல்லவை. எதையும் நினைத்துக் கவலைப்படக் கூடாது நம்முடைய முடிவுகளுக்கு அப்பாற்பட்டவை எதையும் எண்ணி மன உளைச்சல் படக்கூடாது, பயம், திகில், கோபம் ஆகியவை படபடப்பை உண்டாக்கும், இந்த உணர்ச்சிகளை விலக்கப் பழகிக் கொள்ளுங்கள்.

உங்களுடைய டாக்டர் குறிப்பிட்ட மருந்துகளைத் தவறாமல் சாப்பிடுங்கள். அவருடைய ஆலோசனைப்படி அடிக்கடி சோதனை செய்து கொள்ளுங்கள். உங்களுடைய குறைகளை அவரிடம் மனம் விட்டுப்பேசி ஆலோசனை பெறுங்கள். அவர் டாக்டர் மட்டுமல்ல, உங்கள் இருதயத்துக்கு நண்பருங்கூட. நல்ல இருதயம் படைத்தவர் என்று பொதுவாகச் சொல்வது உண்டு. ஆரோக்கியமான உடலுக்கு இது மிகவும் அவசியம்.இதை ஏற்படுத்திக் கொள்வது நம் கையில் தான் இருக்கிறது. முதுமைக் காலத்தில் இது மிக அவசிய மானதுங்கூட.

## மருத்துவ விளக்கம்

## எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு முஸ்லிம்கள் பெரும்பான்மையாகவுள்ள கல்முனை என்ற புதிய மாவட்டம் அமைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து சிங்கள மக்களால் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டுளது.

திஹமடுல வெகுஜன அமைப்பின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இவ் எதிர்ப்புப் பேரணி அம்பாறைச் சந்தியில் ஆரம்பமானது

பேரணியின் பின்னர் வீதியில் ஆர்ப்பாட்டங்கள் இடம் பெற்றதுடன் இதில் ஐயாயிரம் பேர் வரை கலந்து கொண்டனர். (உ 5)

## பழங்களின் விலைவீழ்ச்சி

(கல்வயல்)

தென்மராட்சியின்பல குதிகளுக்கும் பொதுமக்கள் சென்று வர ஆரம்பித்ததையடுத்து சந்தைகளில் பலாப் பழம், மாம்பழம் என்பவற்றின் விலை வீழ்ச்சி கண்டுளது

தற்போது இவற்றின் பருவ காலமாகையால் அங்குசென்று வரும் மக்கள் ஏராளமாக மேற்படி பழங்களைகொண்டு வந்துசந்தைகளில் விற்று வருகின்றனர். (உ-111)

# அரசு- புலிகள் பேச்சை ஆரம்பிக்காவிடில்

# தோட்டத் தொழிலாளர் வேலைநிறுத்தம் செய்வர்

## தொழிலாளர் ஐக்கிய முன்னணி எச்சரிக்கை

(கொழும்பு)

அரசும் விடுதலைப்புலிகளும் இம்மாத இறுதிக்குள் சமாதானப் பேச்சவார்த்தையில் ஈடுபட முன்வராவிட்டால் பெருந் தோட்டத்துறையில் பாரிய வேலை நிறுத்தமொன்றை மேற்கொள்ளப் போவதாக இலங்கைத்தொழிலாழர் ஐக்கிய முன்னணி எச்சரிக்கை செய்துள்ளது.

இலங்கைத் தொழிலாழர் ஐக்கிய முன்னணியின் தலைவர் ரி. வி. சென்னன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது,

தொடரும்யுத்தம் காரணமாக ஏற்படும் பொருளாதார சீர்கேடுகள் தொழிலாழர்வர்க்கத்தைப் பெரிதும் பாதிக்கின்றன; இதனாலேயே தாம் இந்தமுடிவை எடுத்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசும் விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சு வார்த்தைக்கு வருவதற்கான அதிகமான சமிக்கைகளைஇது வரை காட்டவில்லை என்று இரு தரப்பினர்மீது குற்றம் சாட்டியுள்ள சென்னன்எதிர் வரும் 30ம் திகதி வரை தாம் இருதரப்பினருக்கும் சந்தர்ப்பத்தைக் கொடுத்து அதற்குள் சமாதானத்திற்கான அறிகுறிகள் தென்படா விட்டால் தோட்டத் தொழிலாழர்கள் போரை நிறுத்திக்சமாதானப் பேச்சை ஆரம்பிக்கக் கோரி வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவார்கள் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளனார். (ம)

## திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் உள்ள 444ம் இலக்க பாப்பையா கடை, கடந்த சனிக்கிழமை ஊரடங்கு வேளையில் உடைக்கப்பட்டு அங்கிருந்த ஒருலட்ச ரூபாவுக்குஅதிகமான பொருட்கள் களவாடப்பட்டுள்ளது.

இத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (இ)

## லயன்எயர்

களின்குடும்பங்களுக்குவடக்கு அபிவிருத்தி புனர் வாழ்வு புனரமைப்பு அமைச்சு நஷ்ஈடு வழங்கவுள்ளதாக யாழ் மாவட்ட எம். பி. ஜெகன் அறிவித்துள்ளார்.

இவ்விபத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச்சேர்ந்தவர்களை உடனடியாக ஈ. பி. டி. பி. யின் யாழ்மாவட்ட தலைமைச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ)

## அரசியல்

டுகிறது.

இவ்வாறு இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியிலிருந்து வெளியாகும் 'ஈழநாதம்,' பத்திரிகைதனது ஆசிரியர் தலையங்கத்தில்குறிப்பிட்டுள்ளது நேற்றுவெளியான 'நிராகரிப்பு' என்ற ஆசிரியர் தலைப்பில் மேலும் குறிப்பிடப் பட்டிருப்பதாவது இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்று காணும் விடயத்தில் அரசும்விடுதலைப் புலிகளும் சமனிலையில்இருந்துபேசுவது அவசியம். அவ்வாறில்லாது விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்படமாட்டாதென்ற அரசின் நிலைப்பாடுஇனப் பிரச்சினைக்குஅரசியல் தீர்வுகாண்பதில் விருப்பத்தைக்கொண்டிருக்க வில்லையென்பதையே காட்டிநிற்கிறது இதேவேளை அரசியல் தீர்வுகாண விருப்பமில்லாத அரசாங்கம் யுத்தத்தைதொடர்வதையே குறியாகக் கொண்டுள்ளதாஎனவும் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. [இ)

## விடுதலைப்

அமைப்பை எந்தவொருகட்சியும் கண்டிக்காது ஏனென்றும் பிரதமர் தமது உரையின் போது கேள்வி எழுப்பினார்.

அத்துடன் நோர்வேயின் விசேட பிரதிநிதி எரிக்சொல் ஹெய்ம் அமெரிக்காவுக்கு சென்றது விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க சர்வதேச ஆதரவைபெறவுமே எனதன்னிடம் அலரிமாளிகைக்கு வந்த முக்கியஸ்தர்கள் பலர் தெரிவித்துள்ளனரென்றும் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார். [இ]

## பயண அனுமதி பார்க்க சென்ற

## மாணவன் பலாலியில்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு செல்வதற்கான பயண அனுமதியைப்பார்வையிடச் சென்ற மாணவனை இராணுவப் புலனாய்வுப்பிரிவினர் கைதுசெய்து, பலாலி இராணுவ முகாமில் தடுத்து வைத்துள்ளதாக, மாணவனின் தந்தையார் யாழ் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்;

யாழ்ப்பாணம் 512 வது இராணுவ சிவில் நிர்வாகப் பிரிவில் கொழும்பு செல்வதற்கான அனுமதியைப்பார்வையிடச்சென்ற, சபாபதிலேன் வண்ணார் பண்ணையைச் சேர்ந்த விவேகானந்தராசா கமல்ராஜ் (வயது 16) என்பவரே கைது செய்யப்பட்டவராவார்.

இதேவேளை மேற்படி மாணவனை தாம்கைதுசெய்து பலாலி இராணுவ முகாமில் தடுத்து வைத்துள்ளதாக 512 ஆவது இராணுவப்பிரிவு, தனக்கு பக்ஸ் மூலம் அறிவித்துள்ளதாக யாழ். மனித உரிமை ஆணைக்குழு அதிகாரி எஸ் ஜீவேஸ்வரா தெரிவித்துள்ளார். (இ-10)

## நமபிக்கையில்லா

நீதியரசர் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் சில திருத்தங்கள் கொண்டு வரப்படவேண்டுமென சில எம்பிகள் கருத்துத் தெரிவித்திருப்பதாகவும்இதனை அடுத்துநம்பிக்கை இல்லாத் தீர்மானத் திருத்தங்கள் கொண்டுவரப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். [வ]

## வல்வெட்டித்

கோட்டையிலிருந்து தொண்டமனாறு வரையான கடற்பகுதியில் மீன் பிடிக்க தடைவதிக்கப் பட்டுள்ளது? அத்தடையை உடனடியாக நீக்கப்பட்டு கடற்றொழிலில்ஈடுபட அனுமதிக்கவேண்டும்.

★கடற் றொழிலில் ஈடுபடும் நேரத்தை அதிகாலை ஒரு மணி தொடக்கம் மாலைஆறு மணிவரை அதிகரிக்க வேண்டும

★கடலில் மீன்பிடிக்க செல்லும் தூரத்தை 5கிலோமீற்றராக அதிகரிக்க வேண்டும்.

★தொழிலாளர்கள் இயந்திர படகுகளில் தொழிலில்ஈடுபட அனுமதிப்பதுஅவசியம்,

★கடற் றொழிலில் ஈடுபட இடைநிறுத்திய காலத்திற்கு நிவாரணம்வழங்கவேண்டும்.

★மீனவர்களுக்கெனவழங்கப்படும் நிவாரணத்தின் பெறுமதியை அதிகரிக்கவேண்டும்.

(இ-6-10)

## தடையை நீக்கா விடில்

[2ம் பக்கத் தொடர்ச்சி]

சகல அரசங்கங்களையுமே ஒட்டுமொத்தமாக நாம் இங்கு குறிப்பிடுகின்றோம் பல்வேறுகொடுமைகளாக படுகொலைகளாக இனக்கலவரங்களாக இராணுவப் படைஎடுப்புக்களாக கடல்மார்க்க தாக்குதல்களாக விமானக் குண்டுவீச்சுக்களாக தேடிஅழிப்பு நடவடிக்கைகளாக மேற்க்கொள்ளப்பட்டு அட்டுழியங்களில் எழுபதாயிரம் அப்பாவித் தமிழ்மக்கள் அழிக்கப்பட்டுள்ளனர் உலகமனிதஉரிமை நிறுவனகளிடம் இதற்கான சான்றுகள் இருக்கின்றன.

சிங்கள ஆயுதப்படைகள்சிங்களகாவற்துறையினர் சிங்கள அரசியல்வாதிகள் பௌத்தபிக்குமார் சிங்களக் காடையர்கள் ஆகியோரின் கூட்டுமுயற்சியுடன்தான் இந்தஇன அழிப்புக்கொடூரம் நிகழ்த்திருக்கிறது உடல் உறையவைக்கும் இத்தப்பயங்கர நிகழ்வுகளை இந்தக் கொடூரவரலாற்றில் பதியப்பட்ட மிருகத்தனமான சம்பவங்களை பட்டியல் போடுவதாயின் நூற்றுக்கணக்கான பக்கங்கள் கொள்ளும் சிங்களப்பூர்வீகம் பௌத்தமறுமலச்சி என்றபெயரில்இளைக்கப்பட்ட இந்தஅப்பட்டமான இனக்கொலையைப் புரிந்த சிங்களஅரசை நாம்எப்படி பெயரிட்டுக் குறிப்பிடுவது நிச்சயமாக இதனைஒரு பயங்கரவாத அரசுஎன்றுதான் சொல்ல வேண்டும் இந்தஅரசின் செயல்களை பயங்கரவாதம் என்றுதான் நாம்குறிப்பிடவேண்டும். இந்தபயங்கரவாத வன்முறைக்கு எதிராகவே கடத்த இருபதுஆண்டுகளுக்கு மேலா தமது விடுதலைஇயக்கம் போராடிவருகிறது

### அரசபயங்கரவாதத்தில் இருந்து மக்களை பாதுகாக்கவே நாம போராடுகிறோம்

சிங்கள அரசபயங்கரவாத ஒடுக்கு முறைல் இருந்து ஆக்கிரமிப்பில் இருந்தும் எமதுமக்களையும் மண்ணையும் பாதுகாக்கவே நாம்போராடி வருகிறோம் அரச பயங்கரவாத வன்முறைக்கு எதிர்வினையான வன்முறையாகவே எமது ஆயுதப்போராட்டம் அமையப் பெற்றிருக்கிறது எனவேதமிழரின் விடுதலைப் போராத்தை பயங்கரவாதப் பூதமாக சித்தரித்துவிட முடியாது மானிடத்தின் அடிப்படைஉரிமையான வாழும்உரிமையை ஆதாரமாகக் கொண்டு தன்இனத்தின் தற்பாதுகாப்புக் காகவே நாம் போராடி வருகின்றோம் அரசபயங்கரவாதமாக வெளிப்பாடு காணும் தனதுசொத்தக் குற்றங்களையும் கொடுமைகளையும் மூடிமறைப் பதற்க்காகவே எம்மை சர்வதேசப் பயங்கரவாதிகள் எனசந்திரிகாஅரசு அனைத்துலக ரீதியில் பொய்ப்பிரச்சாரம் செய்துவருகிறது இதன் காரணமாகவே எம்மீதுசுமத்தப்பட்டுள்ள பயங்கரவாதமுத்திரையை அகற்றுவதற்கும் அரசுமறுத்து வருகிறது இத்நிலையில் நோர்வே அரசின் சமாதானத்தை முன்னெடுக்க ஏதுவாக விடுதலைப் புலிகள் மீதானதடையை நீக்கிவிடுமாறு சந்திரிகஅரசை வற்புறுத்தும்படி சர்வதேசசமூகத்திடம் புலிகள் இயக்கம் வேண்டுகோளைவிடுத்துள்ளது. (வ)

## புலிகள் தம் மீதான தடை நீக்காமல் பேச்சுக்குவரப்போவதில்லை

### செல்வம் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் பௌத்த பேரினவாத பௌத்த பிக்குகளின் கருத்துக்கும் இனவாத அமைச்சர்களின் கருத்துக்கும் செவிமடுத்து வருவதனால் தான் விடுதலைப் புலிகள் மீதானதடையைநீக்குவதற்கு அரசு தயங்குகிறது என்று ரெலோ அமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி. செல்வம் அடைக்கலநாதன் குற்றஞ் சாட்டியுள்ளார்.

புலிகள் மீதான தடை நீக்கம் தொடர்பாக செல்வம் அடைக்கலநாதன்எம்.பி கருத்துத் தெரிவிக்கையில் இனப்பிரச்சினை தீர்வு முயற்சியில் அரசு எதுவிதமான ஆக்கமோ அக்கறையோ காட்டவில்லை. விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கப்படாதவரை அவர்கள் பேச்சுவார்த்தைக்கு வரப் போவதில்லை;

எனவே அரசாங்கம் புலிகள் மீதான தடையை நீக்கினால் அவர்கள் பேச்சுவார்த்தைக்கு வருவார்கள் என்று அவர் தெரிவித்துள்ளார். (ம)

## நம்பிக்கையில்லா தீர்மானத்தை எதிர்கொள்ளத் தயார் அமைச்சர் மஹிந்த

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியினால் என் மீது கொண்டு வரப்படவுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை பாராளுமன்றத்தில் சந்திக்க தயாராக உள்ளேன் என்று அமைச்சர் மஹிந்த ஹேரத் செய்தியாளர் மகாநாடு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அம்மகாநாட்டில் அமைச்சர் மஹிபாலஹேரத்மேலும் தெரிவிக்கையில்கூறியதாவது;

மாவனல்லையில் இடம் பெற்ற சம்பவத்திற்கும் எனக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை; சம்பவம் நடைபெற்றபோது நான் நாட்டில் இருக்வில்லை அந்நிலையில் இச்சம்பவத்திற்கு நான்எப்படிப் பொறுப்பாவேன்.

ஐக்கியதேசியக்கட்சியினால் கொண்டுவரப்படவுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை பாளுமன்றத்தில் தான் சந்திக்கத் தயாராகவுள்ளேன் என்மீது கொண்டு வரப்படும் நம்பிக்கையில்லா தீர்மானம் எந்தரூபத்தில் வந்தாலும்அதனைஎதிர்கொள்ள தயார்எனறும் செய்தியாளரிடம் தெரிவித்துள்ளார். (வ

நாகம்ஸ்
(சுன்னாகம்)
எம். ஜி. ஆர், சரோஜாதேவி நம்பியார் நடித்த
எங்கவீட்டுப் பிள்ளை
11-00, 2-30 பு. நே:
இன்னும் ஒரிரு தினங்களுககு மட்டும்.
(கி-2021)

மங்கையர் மனம் மயங்கும் தங்க நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்
மகாநதி ஜுவல்லறி
72A, கஸ்தூரியார் வீதி, [கி-2040] யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை "வலம்புரி" அச்சக ஸ்தாபனத்தாரால் இல 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001ம் ஆண்டு மே மாதம் 29ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.